தும்சம்செய்குரேன்பாரு... தொந்திரவில்லாமல்
துள்ளியமண்டைகள் தள்ளியேசிதரிட
உன்னதுகாணவே விள்ளுமென்சேதி (வலு)

விராடராஜன்சொல் கந்தார்த்தம்.

உச்சிதங்கள்மெத்தவுண்டுநீபேசாதே
உன்னைதிரிகர்த்தனென்று அறிவாரில்லே
மெச்சுமெர்தன்மைத்துனன் கையடியும்பட்டு
விரியங்கள் தானிழந்து வேஷங்கெட்டு
மச்சனகர்தனையிழந்து ஓடிப்போன
மீன்னவனேயென்ன புத்திவலுமைபேச
கச்சரவம்போலெழுந்து...ரேவபாணம்

விராடராஜன்சொல் தரு.

நடுங்கியொடிங்கவிட்டேன் பலபடையுடன்நீயும்
நடுங்கியொடிங்கவிட்டேன்
நடுங்கிழுதுகிட்டோடராஜு வந்தனைச்சாட
விடுங்கணையெல்லாம் வெட்டிவெருங்களமாகச்சாய
வீரியனாகிதோ மீறியகணைமழை
மாரிகள்போலவே வாரதுகோடி (நடுங்கி)

இடராஜன்சொல் கவி.

இட்டிபேயச்சமற்று செப்பினமொழியுரைக்க
வெட்டினேன்விருதைநாலும் விராடனேயுன்னைப்பற்றி
கட்டினேன்கொடிகம்பத்தில் கடிகியேகுவனேனீயும்
தட்டியேபுரவிதன்னை தனிரதம்நடத்துவாயோ.

வசனம்.

அடாவாடாவிராடனே நீ சற்றுமறியாமல் என்னையிழிவாகச்சொன்னளவிலே உன்னுடைய விருதுகளெல்லாமென்கைபாணத்தினாலே வெட்டித்தள்ளி உன்னையும் பிடித்திழுத்துயெனது ரதக்கொடிகம்பத்தில் கட்டியிருக்கிறேன் அடா தேர்ப்பாகனே நடித்தபுரவிகளை தட்டி ரதத்தைத்திருப்பி அஸ்தினாபுரிமார்க்கம் திருப்புவாம் ரதத்தை நடத்தும் தேர்ப்பாகனே.

விராடராஜன் அபரப்படும்-கவி.

சந்திரசேகரனேபோற்றி சத்தியம் நெறியில்லாமல்
வந்தெந்தன்பசுக்கூட்டத்தை வளைந்திந்தமன்னனாலே
நொந்துநான் சண்டைசெய்து நோகவும்படைகளெல்லாம்
யெந்தனைபிடித்துக்கொண்டு யேகவும்விதித்திட்டாயோ.

வசனம்.

ஐயையோ தெய்வமே இந்த ராஜனானவன் என் பசுக்கூட்டங்களையெல்லாம் அபகரிக்கவும், நான் அபஜெயமடைந்து இவன் கைபற்றி ரதக்கொடிகம்பத்தில் கட்டிக்கொண்டுபோக இவ்விதிவரவிடுத்தாயோ தெய்வமே.

திரிகர்த்தன் சொல்தரு.

தெய்வத்தை நினைந்தாலே தீரமுண்டாகுமோ
தேம்பியழுதாலுன்னை விடுவனோ
தீரனே வெகுசூரனே இதில்சாரமென்ன
சும்மா வாரும்வாரும்மன்னா

விராடன்சொல் தரு.

தெய்வச்செயலோவென்று சிந்தையில்குடிவைத்து
செங்கோல்செலுத்திவந்தேன் ஆதிமூலமே

பையீரவமீ தாடும் நாதாநாதாகோவிந்தா
பக்ஷம்ன்மீதிலில்லையோ ஆதிமூலமே

திரிகர்த்தன்சொல் தரு.

ஆதிமும்மூர்த்திகள் ஆர்வந்து தடுத்தாலும்
அச்சம்பெருகியுன்னை விடுவனோ-இது
அங்கமோயின்பம் தங்குமோ-அம
பங்கமல்லவோவெகு சிங்காரமர்ய்வாரும்-ஆதி

விராடன்சொல் தரு.

பொங்கமிவன்கையிலே பங்கப்படவிட்டாயோ
பூதகிபாலுண்டநாதா ஆதிமூலமே
சங்குசக்ரதண்ட பாணிபங்கயபத
மில்லாமல்தரும்பலன் கெதியேது (ஆதி)

பொதுகவி.

திடமுடனே திரிகர்த்தன் விருடன்தன்னை
தேர்க்காலில்கட்டியவன் கொண்டுபோக
பரதவிக்கும் மன்னவனை வீமனான
பலாயனுமேகண்டு இருவிழிசிவக்க
சரசமெனகெங்குபட்டர் முன்னேவந்து
தான்பார்க்க அவர்நயனஜாடைகாட்ட
உரகமணிமுடிசாய குதித்தெழும்பி
உக்ரமுடன்சூரனுமே வருகின்றனே.

வசனம்.

இப்படி திரிகர்த்தராஜன் விலாடராஜனைக்கட்டிக்கொண்டு போகும்போது பலாயனாயிருக்கும் வீமசேனன் கண்டு இனியில்லாதகோபங்கொண்டு கெங்குபட்டராயிருக்கும் தர்ம்மராஜனை உற்றுப்பார்த்து அவர் நயனபாஷை காண்பிக்கவீமசேனன் தக யனைப்பார்க்கிலும் அதிவேகமாகவருகிறவிதங்காண்க.

வீமன்வருகிற தரு.

நொண்டிச்சிந்து.

அதிவேகமாய்வந்தான்-பீமன்
ஆரடாவில்லென்று மீறியதட்டி
யெதிரிலரணசிங்கம்-போலே
யேகியேகுதித்து பகிரண்டமும்
கிடுகிடென்றதிரவேதான்-மீசை
மெச்சுவிகொட்டியே உக்ரமுடனே
கூவியேபல்லைகடித்து-இவனது
குடலைபிடுங்குவே னெனவுரைத்து
கொட்டியதட்டிபீமன்-கால்களில்
கெண்டாமணியது கொஞ்சிடவே
விண்டலத்தேவர்களும்-பீமனை
கண்டுபயந்தவரும் காடேரவும்
சிதரவேமுடிகளை நான்-யிப்போ
சிதைக்குறேன்பாரென்று கொடிக்கம்பத்தை
முறித்துமேதாணெறிந்தான்-திரிகர்த்தன்
முன்னாலேவிடுத்தபாணம் சொன்னால்வருமோ.

திரிகர்த்தன்சொல் தரு.

ஒருரதம்தன்னைபழிக்க பாவியனு-மருரதமேரினேன்
வருநுதுபாணங்கள் வகைவகையாகவே
உந்தன்தோளாண்மையும் யீடாகுமோபோடா (ஒரு)

பீமன்செல் தரு.

வருகிரபாணத்துக்கு திரிகர்த்தா
மனதச்சம் கொள்ளுவனோ
ஒருகரத்தால்வாரி உன்னிடப்படையெல்லாம்
உதிரத்துடன் சிதரத்தலே
பதரிப்படை வதைசெய்குவேன் (வரு)

திரிகர்த்தன்சொல் தரு.

கநிசமைக்கும் மடையனே
சண்டைக்கு வந்தாயடா
வாதைக்குள்ளாகிய மடியவிதியைக்கொண்டு (சரு)
வந்தாயினி நொந்தேவிட
அந்தோகனை தந்தேனோடா (சநி)

பீமன்சொல் தரு.

மூடிகிப்பசவைதிருடின் கள்ளனுக்கு
முகத்தில்மீசை என்னடா
மடிகிகள்ளனுக்கு கட்டுண்டுஉதையுண்டு
கண்டேவாதி கொண்டேவர
அண்டாவுனை செண்டாடுவேன் (மூடிக)

திரிகர்த்தன்சொல் கந்தார்த்தம்.

வெத்திசேர் மன்னனென்று விருதுள்ள வீரனென்று
சற்றுமஞ்சாமலெந்தன் நடைமீறிபேசவந்தாய்
அத்திக்குவீரசிங்கம்· அஞ்சவல்தாருக்காளுண்டோ
கத்திக்குவிரைபாய்வந்த

திரிகர்த்தன்-சொல்-தரு.

கண்டகாவாடா உத்தனைக்கூறாய்
துண்டிப்பேன்போடா
தண்டிக்கவந்தவனே கர்ளாதகினமீறி
துண்டிக்குயிரென்று உச்சிதவார்த்தைகள் (கண்டி)

பீமன்சொ[illegible]ந்தார்த்தம்.

மட்டில்லாசேனைசூழ வந்[illegible]கைளாசன்தன்னை
கட்டுடையவிதம்போலுன்னை கட்டவுமனதிலெண்ணி
வெட்டினேனென்விருதையெல்லாம் விராடனரதத்திலேற்றி
கொட்டிபேயனைப்பிடித்து.

பீமன்சொல்தரு.

கொடிகம்பத்தோடே கட்டினேன்பாரும்
மடிக்கயுதிரமுண்டு வலிகூறிவந்தாயோ
இடிகேட்டநாகம்போல் ஏங்காதே சோங்காதே. (கட்)

வசனம்.

இப்படித்திரிகர்த்தனை கட்டிக்கொண்டுவரும்போது திரிகர்த்தன் துயரப்படுவது.

திரிகர்த்தன் சொல் கவி,

அன்னவாகனனேயிந்த அவனியிலரசனாகி
மின்னிலமதிக்கவாழ்ந்து இருந்துநானிந்ததேசம்
மன்னனைசெயித்துக்கட்ட மடையனும்கட்டிவாட்ட
பெண்ணையும்விதித்திட்டாயோ யிவ்விதிக்கென்னசெய்வேன்

திரிகர்த்தன்சொல் தரு.

அம்புவிமதிக்கவே அதிகசெல்வம்பெற்றேன்-சிவனே
கம்பத்திலெந்தனை கட்டியடிக்கவைத்தாய்-சிவனே

பீமன் சொல்தரு.

அந்நியபொருளுக்கு ஆசைப்பட்டதுபோக-ரூசனே
மன்னனையுங்கட்டமனதெப்படி துணிந்தாய்-ரூசனே

திரிகர்த்தன்சொல் தரு.

தெய்வந்தனையிழந்த திவினைவிதுநானே-சிவனே-பொருதன்
கையிலிருக்கிறேன் கனரத்தம்பாயுதே-சிவனே

பீமன்சொல்தரு.

புரவலன்தனைக்கட்டி போனசெருக்கென்ன-ரூசனே
அரகராவென்றுமே அழுதால்பழிவிடுமோ-ரூசனே

பொது கவி.

இப்படிபுலம்பிமன்னன் ஏங்கிடாதத்தைபீமன்
கொப்பெனதருமர்முன்னே கொண்டுமேகிருத்தும்போது
செப்பும்விராடபூபன் சிரமீதுகரங்குவித்து
தப்பில்கெங்குபட்டர் தருமரைவணங்கிச்சொல்வார்.

வசனம்.

இப்படி திரிகர்த்தன் புலம்பி தியங்கவீமசேனனானபலாயனன்ற
த்தைமுடிக்கி கெங்குபட்டர்முன்னே கொண்டுபோய்கிருத்த வி
ராடபூபதி ஆனந்தம்பெருகி சொல்லுகிறவிதங்காண்க.

விலாடராஜன்சொல் தரு.

வந்தனம் வந்தனம்யெந்தனிடவுருத்த
சுந்தரனேயுனக்கு வந்தனம்
அந்தணகுலசேகரா விர்தைபாலாயனனே
வாருதிசூழ்ந்திருக்கும் வையகந்தன்னிலிந்த
பேருதவிசெய்துகீர்த்தி பெற்றவனே அடியேன்
ஆதிமூலாதாரனேயென்ற யானையைகாத்ததுபோல்
நிதறசெய்தவரே குலதெய்வமென்றேதுதிப்பேன்
வள்ளலேயென்னுடைய அந்தயானகர்சேனைகளும்
உள்ளப்பொருளையெல்லாம் உங்களுக்கேயளித்தேன்

தருமராஜன்சொல் கவி.

நல்லநாட்டரசபூமி நற்பொருள்பலவுங்கூட்டி
யெல்லையுள்ளதுவுந்தந்தேன் யென்றது மெய்யெயாகில்
வல்லமையாலேகட்டி வந்ததோருஜன்தன்னை
சொல்லவேகட்டைவிட்டு சீக்கிரமாயனுப்புவீரே

வசனம்.

கேளும் விராடராஜனே சீமை பூமி யானைசேனையண்டுபண்டாரமுதலானதும் உங்களுக்குத்தந்தேனென்பது நிசமாயிருக்கும் பக்ஷத்தில் யிதோதேர்க்காலில் கட்டிவந்தராஜனை கட்டிவிழ்த்து அனுப்பிவையும்ராஜனே அப்படியேகட்டிவிழ்த்து அனுப்பினைத்தேனையாசுவாமி அப்பாவிலாடபூபதியே யிந்தராஜன்போனசேதியறிந்து திரியோதனாதிகள் சண்டைக்குவருவார்கள் யிவ்விடத்தில்தானே பாளையமிறங்கியிருக்கவேணும் விருடனே அப்படியேநல்ல

தென்று இருக்க திரிகர்த்தன் பங்கத்துடன் போகுமுன்னமே துரியோதனுதிகள் கொலுவுக்குவருகிற விதங்காண்க.

பொது கவி.

பரவியசேனைமன்னர் பலமிகுசகுனிகளு
அரவியாம்வீஷ்மர் துரோண சொற்பெரியோர்களும்
இரவியமிகுத்தவீரர் திலகராப்படைகள்மின்ன
குறைவிலா துரியபூபன் கொலுவுக்குவருகின்றாரே

துரியோதனன் வருகிற—தரு.

அணிமுத்து மணிசித்ர முடிவைத்தழகில்மிக்க
அரவக்கொடியோன்வந்தான் கொலுசம்பிரமதாக (அ)
கணிதத்திலவத்த காலாளும் தேராளும்
கரிபரிசூழ்ந்திட வரிசிலைவீரரும்
கர்ணன்சகுனிசல்லியன் மன்னவருடனே (அணி)
குண்டசரங்களாட கடகம்பளபளென்ன
கவச்சகுண்டலமாடவே வெகுவேடிக்கை

கொண்டாடிபோல் பேரிகுமுரவும்
சல்லரிபூரி கோதிலாதசங்கிதமுழங்கிட
குருபெரியோர்களும் பரிவுடன்சூழவே (அணி)
சங்கத்தொனியெடுக்க திங்கள்குடைபிடிக்க
தம்பிமார் நெருங்கிடவே வெகுவீரியமாக
மல்லையர் நாட்டியமாட மாதர்க்கவரிபோட
வல்லயமீட்டியும் வில்லும்பிலங்கிட
வாசவனெனவே னேசமதாகவே (அணி)
மன்னவன் திரிகர்த்தன் இன்னகர்வருமுன்னே
மச்சநகருக்கேகவே ஆலோசனையாக-மச்ச
மின்னிமகுடமுடி வேந்தர் நடுநடுங்க
விந்தையிலதிவித சந்திரகுலபதி
வெடியுமுழங்கிடவே யிடியதுபோல (அணி)

துரியோதனன்சொல் கவி,

அறிவுள்ளசகுனிகர்ண ஆவுகள்தனைதிருப்ப
திரிகர்த்தருஜன்போன தெட்சணதிசையை நோக்கி
மருவிய மச்சநாட்டை வடதிசையடைந்துநாமும்
வருகுவோம் பசுக்கூட்டத்தை வனத்திடம்அரியலாமே,

வசனம்.

கேளும் மாமா சகுனி கர்ண பெரியோர்களே நேற்றையதினம் திரிகர்த்தருஜன் மச்சநகரேசி தெக்ஷணதிசையில் பசுக்கூட்டத்தை திருப்பினால் பாண்டவர்களைக்காணலாம் எல்லோரும் பயணப்படுங்கள் சபையோர்களே.

துரியோதனன் சொல்தரு.

மச்சநகரைநாடினூர் துரியராஜன்
மச்சநகரைநாடினூர்.
அரவத்துவஜமாட வெகு வேடிக்கையாக
பரவிச்சேனைக வாடவே
இரவிமணியிழைத்த யிலகுமுடிசெ. லிக்க

இந்திரனெனவே சந்திரகுலமதி
மந்திரிசூழவே விந்தையதாக (மச்ச)

அண்டம்கிடுகிடென்னவே அதிரபேரி
தண்டைகலகல வென்னவே
கண்டசரங்களாட கடிகிரதத்திலேறி (சரு)

கத்திகள்வீசியே வெத்திகள்பேசியே
பத்தியதாகவே உத்தமர்சூழ (மச்ச)

பஞ்சவர்தனைக்காணவே ஆவலுடனேசேனை
மிஞ்சியே மனந்தோணவே
சஞ்சலமதுகொண்டு தாண்டியேதேசத்தை (சரு)

நடமதுகொண்டுமே வடதிசைகண்டுமே
கடலெனகிரையவே அடவுடனேசேனை (மச்ச)

துரியோதனன்சொல் கவி.

திடமுடன்யென்பின்வந்த சேனைகாவலரேகேளாய்
வடகோடிகானகத்தில் வந்துகண்டிருந்தோமிந்த
படர்கானகத்திலுள்ள பசுக்கூட்டம்தன்னையெல்லாம்
படபடென்றோட்டிநீங்கள் மடக்கியேதிருப்புவீரே.

வசனம்.

கேளும் ஏவலாளிகளே நாம்அஸ்தினாபுரியைவிட்டு மச்சநாட்டைச்சார்ந்த வடகோடிகானகத்தில் வந்திருக்கிறபடியினாலே யிந்தகானகமெல்லாம் பரவி சூழ்ந்து யிருகின்ற மசுக்கூட்டங்களையெல்லாம்மடக்கி, அஸ்தினாபுரிமார்க்கமாய் கொண்டுபோங்கள் சேருங்களப்பா வீரர்களேஅரசன் உத்திரவின்படி பசுக்கூட்டங்களை சேருவக்காரர்கள் மடக்கித்திருப்ப கோவைபரிபாலனஞ்செய்யாநின்றசகாதேவன்முதலான யிடையர்களெல்லாம் யிச்சேதியை அரசனுக்குத் தெரிவிக்கும்படியாக பட்டணத்துக்குவருகிற விதங்காண்க.

இடையர்கள்சொல் திரு.

கோனன்வந்தானே சகாதேவ
கோனன் வந்தானே

கோபாலர்தன்னுடன் சேனைகள்சூழ்ந்திட
சேதியையுரைக்க கோனன்வந்தாரே

கொற்றவர்கள்பசு கூட்டத்தைக்கைக்கொண்டு
உற்றசேதிகூற கொற்றவனைத்தேடி

கோனன்கம்பளி பால்பல்லாதடியுடன்
வெம்பியழுதுமே வேந்தனைக்காணவே

மன்னவர்களெல்லாம் வந்துநிறைந்திட
யென்னவிபரீதம் யெப்படியோவென்று (கோனன்)

வசனம்.

இப்படிகோபாலர்வருகிறபோது சுதர்க்கனை பாணவன்கொலுக்குவருகிற விதங்காண்க.

சுதர்க்கணீவருகிற கவி.

குயில்மொழிவதனரூபிகுங்குமங்களபம்பூசி
மயிலன்னம்சாயலாக மணிபணியலங்கிரித்து
கயல்விழியுடையமாதர் கடிகிசாமரைகள்வீச
துயிலணிசாகைமின்ன சுதர்க்கணீவருகின்றாளே.

சுதர்க்கணீசொல்தரு.

சோதிமணிகள்வீச மாதுநயங்கள்பேச
சுதர்க்கணீதேவிவந்தாள் ஒய்யாரமாது (சோதி)

ஜாதிமல்லிகைசூடி சந்தனகளபம்பூசி
தங்கக்கடகமீறு செங்கையிலிலங்கிட
பொங்கமதாகவே மங்களசுபகரி (சோதி)

மதனரதியெனவே வதனமகளெனவே
மாதுசுந்தர்க்கணீவந்தாள் நல்ல வஞ்சிதரஞ்சிதமாது
அதனவடிவுடைய அரிவையர் புடைசூழ
அருளைசிகாமணி பெருமையிலதிவித
பரிமளமிகுதிய தருமணியான (சோதி)

சுட்டிமுத்துகள்தொங்க வட்டப்பணிகள்கொஞ்ச
தோகை சுதர்க்கணைவந்தாள் நல்ல மின்னியஉன்னித-தோகை
கட்டியசரிகைச்சேலை மெட்டியே பளபளென்ன
கதிர்மணிபணிகளும் சதுர்பெருமழகிய
மதிமுகரூபிணி அதிகவிதமாக (சோதி)
பாடகம்பீலிகொஞ்சும் கூடியமணிகள்கொஞ்ச
பாவைசுதர்க்கணை வந்தாள் நல்லஒய்யாரி உச்சிதபாவை
தேடரிய சாலைநகர் விருடகாடு யீசன்பாதம் (சரு)
சிந்தையிலனுதினம் வந்தனம்செய்துமே
தந்திடவேசெய மந்திரமோதி (சோதி)

வசனம்.

இப்படியாக கொலுசிங்காரமாயிருக்கிறபோது சுதர்கணையைய்
மனைகோவுமேய்க்கின்ற சகாதேவன்கண்டு சருணம்சருணமம்மாதர்
யேவடக்குதிக்கில் கொடிதாயிருக்கிற கானகத்தில்கடல்கிரைந்தவெ
ள்ளம்போலும் அஸ்தினாபுரியையாளபட்ட துரியோதனமகாராஜன்
சேனைகளுடனே வந்துநமது பசுக்கூட்டத்தை முழுமையும் வளைத்
துக்கொண்டுபோகிரதர்க்குவந்து மேற்படி பசுக்கூட்டத்தை மடக்
கிக்கொண்டுபோய்விட்டாரம்மா,

சுதர்க்கணைசொல் கவி.

மாதவா அரிகோவிந்தா மன்னவர்பலரும்போன
சேதியையறிந்திடாமல் சிந்தைநொந்திருக்கும்போது
பாதகதுரியன்வந்து பசுக்களை கொண்டுபோக
வாதுசெய்தவரை வெல்லவகையொன்று மறிகிலேனே.

வசனம்.

அரிகரிகோவிந்தா முகுந்தா வைகுந்தா நேற்றியதினம் தெட்சணையிலிருந்த பசுக்களையோட்டிக்கொண்டு போகவந்தராஜன்மீது என்பிராணநாயகரும் கெங்குபட்டர் முதலானபேர்களும்போயிருக்கசேதியொன்றுமறியாமல் மனம்வாடியிருக்கும்போது யின்றைக்கு வடபாரிசத்தில்துரியன் பசுக்களைகைபற்றியசங்கதியை யறிந்தேன் அவர்களைவெல்லும்படியான வகையறிகிலேனே தெய்வமே.

சுதர்க்கணைசொல்தரு.

என்னசெய்குவேன் அரிபன்னகசயனா
யேங்கலானேனே மனம்தேங்கலானேனே (சுரு)
இன்றுதுரியனவன் கண்டுபசுக்களை
கொண்டுபோகவும் நாடியே
தடுத்திடாமலேயிந்த வீட்டில்பசுக்களை
தாண்டினால்வருமோ மீண்டுபோகுமோ
தவறுவந்ததே யெவரைநோகுவேன்
பவருசெய்திடும் மவரைக்காணேனே
தம்பிதன்னையேயிப்போ நம்பினேனுமே
தாழ்விலாமலேயிங்கே வாழ்வடைந்தேனே
தரையில்மாண்டுமே மறையஅச்சமும்
துரியன்சேனையே திரையலாச்சுதே
உலகிலவனுமே சேனைபலமுண்டானவன்
ஓடிக்குயவனையும் மடக்குவாரிலை
உத்தசேதியால் பத்துதேவயர்
மெத்தகுமரியே கர்த்தனேயெனக்கு

ஸ்திரீகள் அதர்க்கிசைசொல்கவி

கோடிதாதிமாரே கிட்டியெநெருங்கிச்செழுங்க
ஆனனுமில்லையென்று அறிந்திங்கேவருகுமுன்னே
காளையரூபங்கொண்டு கன்னிகளெல்லாங்கையில்
வாளேந்திஅலங்கம் மீது வரிசையாயிருந்திடுரே.

வசனம்.

வாருங்கள் தாதிமார்களே துரியோதனாதிகள் பசுக்களைக் கவர்ந்தகாலத்தில் தடைசெய்துப்போராட அரசன்போகஊரிலில்லாதபடியினாலேபட்டணத்தில் ராஜனில்லையென்று அறிந்துசேனைகள் நமதுபட்டணத்தில் புகுந்துகொள்ளைகொள்ளநேரிடும் அதர்க்காக அரசன்யிருப்பதுபோலவே பட்டணத்திலுண்டாகிய அனேகம்பெண்களை யழைப்பித்து புருஷவடிவமாயலங்கரித்து விருதுகளுடனேகையில் ஆயுதங்கள் கொடுத்து அலங்கத்திலேற்றி வரிசையாயிருத்துங்கோள் தாதிமார்களே யிந்தச்சேதிராஜனுக்கு தெரியும்படி தூதரையனுப்ப அந்த வேளையில் உத்தரகுமாரன் கல்விசாலையைவிட்டு போசனஞ்செய்யஅரண்மனைக்கு வருகிறவிதங்காண்க.

உத்தரகுமாரன்கவி.

தன்னுரு பணியைமாற்றி
தகுந்த ஆண்வேஷம்பூண்டு
உன்னிதமுடனிருக்கும்
உண்மையை யுரைசெய்குவாயே.

வசனம்.

சரணம் சரணமம்மாதேயே இதுயென்ன இன்றையதினம் ஸ்ரீகளெல்லாங்கூடி தானணிபணிகளெல்லாநீக்கி ஆண்வேஷங்கள்பூண்டு முப்பத்திரண்டு விருதுகளணிந்து அலங்கத்தை சுத்தி வரிசையாக நிற்பதென்ன எனக்குத் தெரியச் சொல்லவேணடும் தாயே.

சுதர்க்கணை சொல்-கவி.

அப்பனேயுனது தந்தை அகன்றிடும் வேளை தன்னில்
கொப்பெனத்திரியன்வந்து கோவுகள் தனை திருப்பி
கப்பதம் யெதிரில்லாத கலகங்கண்டிவ்விடம்வந்தோம்
தப்பிதம் செய்திடாமல் தந்திரம் செய்திட்டேனே.

வசனம்.

கேளுமப்பா உத்திரகுமாரகா உனது தந்தை முதலானவரும் இல்லாதகாலத்தில் வடதிசையிலிருக்கும் பசுக்கூட்டங்களை திரியோதினனாதிகள் மடக்கிக்கொண்டு போகிறபோது அதைத்தடுக்க நேரிடாதவிதத்தினாலே பட்டணத்தில் அரசனில்லையென்றறிந்து இவ்விடம் ஒருவேளைவந்தாலும் வருவார்களென்று இங்கே அரசன்இருப்பதுபோல் எனக்குத்தோற்றப்பட்டு இந்த தந்திரம் செய்தேனப்பா குமாரகா.

உத்திரகுமாரன் சொல்தரு.

அம்மாநானென்னசெய்குவேன் ஒருஅரசனும்பசுக்களை
குருசுட்டன்கடிகிட (அம்மா)
அம்மா அந்தராஜனை யடக்கியே மடக்காமல்
அம்மாயிருந்தாலது சூரத்துவந்தானே. (சுரு)

ஆரியோ காவமே வீரியம்செலுத்தவும்
தீரமுழுண்டோகு சாரதிபாரும். (அம்பா)

சுதர்க்கனைசொல் தரு.

சண்டைக்குப்போரேனென்றால் உன்னை
ஒப்பியோ காவுமே எப்படியனுப்புவேன் - சண்டை
அண்டையில் பரிதேரும் ஆனைசேனையில்லாமல்
ஒண்டியாகவேபோக உசிதியுனக்கேதடா (சரு)
உந்தனையனுப்பவும் இந்தனை அணியும்பா
மைந்தனே பொருத்திடும் தந்தையும்வருவார் (சண்டை)

உத்திரகுமாரன்சொல் தரு.

அரியாதபிள்ளையென்று யென்னையே விதம்பண்ணவும் காவமே !
கோபம் அதிகரித்தமொழியாலே தந்தைவந்திடுமுன்னே
அருசாகபகக்கூட்டம் அலையும்பட்டணம்விட்டு (சரு)
துஷ்டனை வெல்லவும் கஷ்டமுமாமோ
பக்ஷமாசாரதி யிஷ்டமாய்பாரும் (அரியாத)

சுதர்க்கனைசொல் தரு.

வீரவல்லமைபேசாதே அடாதுண்டனே
அவர்பலம் கண்டறியாமல்
பாரிலதிகவீரன் பதினோராக்ரோணிசேனை
சூராதிசூரமுள்ள ஆரியன்புகழ்கெம்பீரன் (சரு)
சொல்லவுமிப்படி வல்லமைபேசவும்
செல்வனேயிதுவென்று நல்லறிவாமோ (வீரவ)

உத்திரகுமாரன்சொல் கவி.

அன்னையேயிது யென்னவார்த்தை
அரியாதபிள்ளையென்று
பன்னியேவதைசெய்தாலே
பகைக்காணமாட்டோம்
யென்னிடவலுமைபாரு
எனக்குசாரதியைத்தந்தால்

மன்னவர் தன்னையெல்லாம்
வானுலகேற்றுவேனே.

வசனம்.

கேளுமம்மாதாயே துரியாதவனென்று தடைசெய்தால் பசுக்கூட்டத்தையிழந்து அபகீர்த்திசேரிடும் யெனக்குசாரதிமாத்திரம் அழைத்துக்கொடுத்ததேயுண்டானால் யெவ்வளவுசேனையிருந்தபோதிலும் ஆட்டுமந்தைக்குள் புலிபுகுந்த பாவனைபோல் அவர்களையெல்லாஞ்சின்னபின்னமாக்கி தேவலோகம் குடியேற்றிபசுக்களைத் திருப்பிவரப்பட்ட ஏனதுசௌரியத்தை பாருமம்மாதாயே.

சுதர்க்கணை சொல் தரு.

வாடாமகனே உந்தனுக்கிந்த
வதுவுண்டோடா சுதனே
போடா துரியாதன் புகழ்பெற்றகொடிமன்னன் (சரு)
பொங்குங்கடலென யெங்குஞ்சேனைகள்
கண்கொண்டவிடம் தங்கும்பாரடா (வாடா)

உத்தரகுமாரன் சொல் தரு.

மாராவதியே மகிழ்ந்திடும்மதியே
ஆராதகோபங்கள் னாகினுன்றவித்திட்ட (சரு)
அச்சமின்றியே இச்சைவைத்துநீ
கொச்சமன்னவனை மெச்சலாகுமோ (மாரா)

சுதர்க்கணை சொல் தரு.

மைந்தனேவாடா உலகினுன்னை
மன்னவரீடா

பெரிதுகவி.

அவனியெல்லாம் கொடியாவும் மச்சவேந்தன்
அருந்தவத்தால் வந்துதித்த தனைநீரன்
கவனமுடன் கல்வியெல்லாம் கற்றுக்கொண்டு
கருத்துடனே தன் பாடசாலைவிட்டு
சிவனடியை மறவாமல் தியானஞ்செய்து
சிறப்புடனே பகிநீர மனையைநாடி

நவமணிசேர் பணிதுலங்க உத்ரிரன்
நல்லழகுமன்மதன்போல் வருகின்றனே.

உத்ரகுமாரன் வருகிறது

உத்ரகுமாரதிரன் வந்தான் (சரு)
நல்லநவமணி பெருகுமொளி
நவமணிபோல (ருத்ரகுமா)
சித்திரபாடசாலைவிட்டு (சரு)
ரோஷதீரபல ராஜாக்கள்புகழ்ந்திட
நேசமானபுவி ராஜர்கள்மகிழ்ந்திட (ருத்தி)
வர்ணமணிமாலை-மிக
வடிவினிலழகிய கொடியிடை பெருகொளி
கன்னியர்கொண்டு மனம்வாட
பூஷணவர்க்கம் துலங்க (சரு)
போகதுரந்தான் நாகரீகபதி
வேகமாகடசி தாகமீறியே (ருத்திர)
காலில் தண்டைகொலுசு கொஞ்சகலகலென்ன
ஒளிய துமீறியே ஜெகமெல்லாம் தெரியவே
விகைதயரமணி மீதங்கள்மிஞ்ச (சரு)
கந்தமலர் வாடைவீச கண்டவர் புகழ்ந்துபேச்

காளைமன்மதன்போலவே வந்திடவ்வனமாதர்களின்பமுதம்
பெண்களெல்லாம் ஆண்ரூபங்கொண்டு-நல்லதிட (உத்)
வரிசையதாகவே அரசரைப்போலவே
கண்களால் அலங்கமிருகண்டு
வெண்கடின கோபமீறி விக்கையிதென்னவென்றுநேர்
[illegible]ர்சூரர்பல தீரரும்வாடிட
கோரமாகவந்த ஆரமுமாடிட (உத்தி)

உத்ரகுமாரன் சொல்கவி.

அன்னையே உன்பாதம்போற்றி
உலகத்தில் விசையாக
கன்னியரெல்லாங்கூடி
கனத்தவீரியர்கள்போல
சிந்தையில்மதியாமல் நீரனேபோக (ஆரு)
தேரும்சாரதியாருமில்லையே
கூருமைந்தலே சோருதேம்மே (மைந்தனே)

உத்திரகுமாரன்சொல் தரு.

பாருமேயம்மா பாதகனைதன்னை
பதங்காதேசும்மா
கோரமுமாகுது நினைவிங்கேதவிக்குது
நெடியகானகமுடிக்கித் கோவுகள்
கடிகிலேகுமுன் நொடிகிலேவிட (பாருமே)

சுதர்க்கணைசொல் கந்தார்த்தம்.

கரைகாணுகடலேஇல்லி கனமுள்ள பெண்ணைக்கொண்டு
இறைத்திடத்துணிவார்போல யெதிர்த்திட அரியன்தன்னை
நிறைமனதானமைந்தா நினைத்ததைமுடிப்பேனென்று
வரவேணும்ரதம்நடத்த.

சுதர்கணைசொல் தரு.

வல்லவனொருவனில்லையே நானென்னசெய்வேன்
வல்லவனொருவனில்லையே

வலைவலையில்லையே குலையெனுப்பிய
விலகியமைந்தனே அலையுமென்றுவி. (வல்ல)

உத்திரகுமாரன் சொல்-கந்தார்த்தம்.

ராவரும் சிரிதென்றென்று அறுவிலும் பெரிதேயென்பார்
ரைபொன்றுபோடமீறி பேரென்றுபென்தாது
ரையவர் குலத்தில்வந்து இனைப்பதோ சமருக்கஞ்சி
நவனென் ரணயோசித்து

உ திரகுமாரன்சொல் தரு.

சிந்தையிலிதக்க துவோ அம்மம்ம தாயே.
 விதக்கமிது யோ
 ந்தையில் து ரிபவும் கொந்திடவேண்டாம்
 ந்தனுக்கபஜ ம் ருந்தகம்வருமோ. (சி)

பொ துவசனம்.

இப்படி வலவகில்லாமல் ாங்கும் சுதர்க்கனைகாணும்படி பணிப்பெண்ணயிருக்கும் ரேபதை வருகிற விதங்காண்க.

பொதுகவி.

துதிபெருமயிலைபோலும் துலங்கிய திரையைப்போலும்
கதிர்மணி பணிகள்வீச கர்ப்பிலுக்கரசி ல்ல
சதிர்பெருஞ் சுதர்க்கனைக்கு சங்கதியுரைக்கவேண்டி
மதிமுகவதனவண்ணமகளிதோ வருகின்றனே.

பணி சொல்தரு.

வடிவுநிறைந்தவள்ளைக் கொடிபோலிடையுமுள்ள
வண்ணமகளிதோவந்தாள் சுதர்க்கனைக்காண
வண்ணமகளிதோ வந்தாள்
படியலருஞ்மறை முடிவில்விளங்கும்சோதி
பங்கயக்கண்ணனுடைய தங்கையும் தன்ருபமாற்றி
பரியாசவந்தகஷ்டமு நீக்கியிஷ்டமாகஜெகாக்ஷிசோதி 0

முத்துநட்டிதொங்கல்மின்ன வெற்றிமதன்சிலையென்ன
முருக்கம்பூவிதழ் அன்னமேவ செருராஞ்சிதமாகவே
கத்துசிமிக்கையும் கம்மல்கொத்துமுத்துகோர்வையாட
நாரணிபரிபூரணி வயிரணிகளம்விச
கருமலர்சூடிட பரிமளம்பொங்கிட
வருமனுநீதியி லுரைதருமாது (வடிவு)

வண்டணியும்கொண்டைகுப்பி மின்னுகின்றனைத்திடவே
மங்களசுபகரிவங்கரர் மயிலன்னமுமென்னவே (மங்க)

தண்டையும்கொலுசுபீலி மஞ்சு சேவிசிட்டாட
தழைக்கும்பூஷணவர்க்கம் செலிக்கும்முகப்...
தற்பெரிசொற்பெருங் கற்புகிரைத்திட
விற்பனர்துதிசெயும் கற்புசௌவுந்தரி (வடி)

நாடிபேசுதற்கனையும் கூடியேவல்லவன் தன்னை.
காயிகொளுமல்தவிக்க மனங்கலங்கிவிக்கு (காயகி)

பேடியானருபகனை கூட்டிப்பயனுப்பவேண்டி
பெட்புளசுதற்கனைக்கும் சிருஷ்ணமனமிதங்கி
பின்னலணிசடையும் மின்னிகுலங்கிட
வன்னிமகளுமிக உன்னிதமாக (வடி)

பணிப்பெண்சொல் கவி.

பாகனுமில்லையென்று பைங்கிளியானதாயே
நாகரீகமானபேடி ரதம்விடவல்லதிரனே
தோகையுமிக்கிருப்பேன் துரிதமாயனுப்பக்கூட்டி
சேவகம்செயித்துக்கொவு திரும்பியேவருதுவாரே.

வசனம்.

கேளுமம்மாசுதர்ஷனை நீயிந்தகாரியத்தைக் கிலேயென்றுவருத்தப்பட்வேண்டாம் நமது நாடகசாலைப் பெண்களுக்கு நாட்டியம்கற்பிக்கும்பேடியானவர் சாதுர்யத்தில்மிகவும்வல்லவரென்று நானறிந்து இருக்கிறேன் அவரைஅவமதிப்பு செய்யாமல் அனுப்பினால் ஜெயம்பெற்று பசுக்கூட்டத்தை திருப்பிக்கொண்டுவருவாரம்மாதாயே.

சுதர்க்கணைசொல் தரு.

என்றுபுதுமைபேசுராய் அந்தபேடிதன்னை
நாடிரதநடத்த வல்லவனென்று (பென்னு)
கன்னிசிரோன்மணியே மன்னர்மனங்களிக்க (சுரு)

வளமையுடனேகையில் உளவுகோல்கொண்டுமே
மடக்கிப்பெரியரதம் விடுக்கவல்லவனே (பென்)

பணிப்பெண் சொல்தரு.

எந்தமன்னரும்மெச்சவே ரதம்நடத்தையடக்க
தேருறமிகவல்லவர் நீ
சந்தோஷமாபெண்சொல்லை தட்டாமலேயனுப்ப
சதுரங்கசேனையும் பதாவேமன்னரை
தாவியேஜெயம்பெற்று மேவியேவருவார்கள் (எந்)

சுதர்க்கணை சொல்தரு.

பேடிசமர்த்தனென்றுமே நீயும்சொல்லமகன்வெல்ல
அந்த பெருமையையுண்டாக்கும் (பேடி)

சர்டாதம் திருப்பும் சமர்த்துமன்னவருக்கு
தந்திடும்ஜெயமென்று எந்தயுகம்சொல்லும்
தன்மையறிந்துமே (பேடி

பணிப்பெண் சொல்தரு.

அம்மா அவரைப்போலவே ரதமோட்ட கொடிநாட்ட
எந்தவுலகிலும் யெதிருண்டோ (அம்மா)

சுதர்க்கணை சொல்கவி.

இப்படிசொல்லும்போது எனக்குள்ள சங்கையில்லை
கொப்பென அனுப்பிவைப்பேன் குலக்கொழுந்தானமைந்தா
ஒப்பிலாபேடிதன்னை உனக்குசாரதியாகவேண்டி
செப்பினனுப்பிவைப்பேன் சீக்ரமாயேகுவாயே.

வசனம்.

கேளும்மாதே நீசொன்னபுத்தியினாலே மனம்களித்தேன் அப்பா குமாரகா இதோ நாடகசாலையிலிருக்கும் பேடியானவர் சாரதி செய்ய வல்லவனென்று தெரிந்திருப்பது அவரை அமர்த்தித்தருகிறேன் சலுதியாசென்று மாட்டை திருப்பிக்கொண்டு வாருமப்பா குமாரகா.

உத்திரகுமாரன் சொல்தரு.

பேடியே சாரதியென்று மெத்தப்பெருமையாய்
இன்பங்கொண்டு ஓடிவந்தாயிங்கே
உண்மைவசப்கூற உன்னிப்பாரு நீ
ஆணும்பெண்ணவர்கான மன்னவனல்லவோ (பேடி)

சுதர்க்கணை சொல்தரு.

பரமரும் பேடியும்பாலானென்னிப்பார்க்கசரியென்றுமேலா
பெருமையரியாமல் பேசாதே நீயிறைய்
பித்தனென்றுமே சுத்தமெண்ணி நீ
உற்றுபாகனை வைத்துயேகுவாய் (பரம)

உத்திரகுமாரன் சொல்தரு.

அங்கவிகாரத்துபேடியம்மா அவுடனேஞனுமேகூடி
பங்கமல்லவோபோக பார்த்தவர்நகையாரோ
பாஷமின்றியே பேசலாகுமோ
நேசமாய்மனம் கூசுதம்மணி (அங்கி)

அழகாயிருந்தென்னவீரம் அவர்களாலேயென்னசாரம்
பழகாபழகத்தை பார்த்துசெய்திறமுன்ன
பாலனல்லவோ சிலனென்றுமே
மேலுமன்னறும் சாலமெக்குவார் (அழ

உத்திரகுமாரன்சொல் கந்தார்த்தம்

அங்கமுமவர்க்குமம்மா ஆணுபெண்ணுமில்லங்க
பங்கமாயிருக்குதம்மா பார்க்கவும்யெந்தனுக்கு
சங்கையில்லாமலந்த சாரதியுடனேன்போக
தங்குமன்னவர்களெல்லாம்.

உத்திரகுமாரன்சொல் தரு.

தட்டிகைகொட்டிநகைப்பார் நானென்செய்வேன்
தட்டிகைகொட்டிநகைப்பார்
தட்டியேஇருகாங் கொட்டிநகைக்கும்போது
கெட்டிதிரமுயென்னே விட்டுகுதித்தோடுமே (தட்டி)

சுதர்க்கணைசொல் கந்தார்த்தம்.

வெல்லவல்லவரிந்த வீண்மொழிபேசுவரோ
இல்லரம்பத்திக்கொண்டால் ஈடேற்றும்வகைசெய்யாமல்
நல்லநீர்கொண்டவிக்கும் ஞாயத்தைபேசவந்தாய்
சொல்லேநீதடுத்திடாமல்.

சுதர்க்கணைசொல் தரு

சுந்தராநீவாடா விருதுகள்பூண்டு
சுந்தராநீவாடா

சுந்தராமெனக்குவந்த சிந்தாமணியேஅந்த
பேடியினுலே விந்தைவிஜயமுண்டாகும் (சுந்தரா)

வசனம்.

அப்படியே உன்மனதின்படி நடத்துமம்மா தாயே வாருமம்மா வண்ணமகளே நீதானேஅந்தபேடியை சாரதிக்கிசையச்செய்துவா ரும்தாயே அந்தசமையத்தில் பேடிநாயகன் சபைக்குவருகிறவிதங் காண்க.

பொதுகவி.

கயிலாசபதியைக்கண்டு கனவரம்பெற்றநீரா
ஓயிலாசகடைநடந்து உத்தமிவரவுங்கண்டு
அயலானவிழியிலங்க அர்த்தநாரீசனென்ன
நயவானபேடிரூபம் நலஞ்செயன்வருகின்றனே.

பேடிசொல் தரு.

ராஜவிஜயபேடிவந்தான் நல்லநயகுணசுந்தரா
ராஜவிஜயபேடிவந்தான்
ராஜவிஜயபேடி நாடகசாலைவிட்டு
நாடியதுரோபதை தேடியே வந்திடும்
சேதியரிந்துமே வேடிக்கையாக (ராஜ)

புருஷவடிவையெல்லாங் காட்டி
இடபாகத்தில் அரிவையுருவம்பணி பூட்டி
வருஷகாலம் துலைத்து வந்தோமென்றதனாலே (சரு)

வல்லிகெம்பீரனும் நல்லமனதுடனே
சொல்லியேவந்த தொல்லையும்நீக்கி (ராஜ)
வாரணரன்மனை தாண்டி தேவி நம்மை
தாராளமாக காணவேண்டி
மாராநந்தவிதத்தை மகிழ்ந்தரியலாமென்று
வாசத்துடன்பிர காசத்துடன்பணி
வீசித்தெதிர்பட கூசவேகண்கள் (ராஜ)

தண்டையும்காலில்கொஞ்ச ஒருபாகத்தில்
மண்டிதீதமணிகள்மிஞ்சகொண்டைகுப்பியும்
கொங்கைகுலுங்க நடை நடந்து
கொப்பெனவருகவும் ஒப்பிலா துரோபதை
தற்பதமென்றுமே நாதான் நற்பதங்காண (ராஜ)

வசனம்.

இப்படியாக வந்தபேடியை துரோபதைசஷ்டபணிந்து சொல்லுகிற விதங்காண்க.

பணிப்பெண் சொல்லுகிறதரு.

சருணம் சருணமுந் தாளிணைக்கிணையான
இரணவடிதன்னழகா கெம்பீரனே யான்சருணம். (சரு)

வாடிவனவாசம்விட்டு வருஷ காலமாகநீர்
பேடிரூபங்கொண்ட எந்தன்பிராணநாதா யான்சருணம்
தேசமெல்லாந் தான்துதிக்கும் தேவிக்கிடபாகந்தந்த
யீசனைப்போல் வந்தமர்ந்த யிணையடிக்குயான்சரணம்
வெத்திமொழி வீரதீரா விண்ணப்பம் நான்செய்யவந்தேன்
சித்தம்வைத்து ஆதரிக்கும் திருவடிக்கு யான்சருணம்.

பேடி சொல் கவி.

மங்களவதியேவாழி வனவாசகாலமெல்லாம்
கங்கையேதுலைத்து இந்தநாளான்று மதிகமாக

பொங்கமாயிருக்கும்போது இவையேயிங்குவந்த
சங்கதி இன்னதென்று தடையிலாதெரிவிப்பயே.

வசனம்.

பிராணநாயகி ஆரண்யவாசம் பனிரெண்டும் அக்யாதவாசன
மொன்றும்ஆக்பதிமூன்றுவருஷம் தாண்டிஇன்றையனுள் அதிகமாக
சந்தோஷகாலத்தில் நீ இவ்விடம்வந்தகாரணமென்ன எனக்குதெ
ரியச்சொல்லும் பிராணநாயகி.

பணிபெண்சொல் தரு.

ஆசையுள்ளமன்னவா மகாராஜர்க்குதிபதியே
நேசமாகவந்தேன் பாசமுள்ளசேதிபேசவும்
யென்மனம் கூசுதேயென்னசெய்வேன் (தரு)
பெண்ணானமே குண்ணாமலே
கண்ணுமல் மொண்ணாமலே (ஆசை)

பேடிகுற்றமில்லை அன்னமேநீயுமந்த
உற்றசேதியுரைக்க அற்றதொன்றுமன்று
வார்த்தையறியாதோர்
சஞ்சுமஞ்சாமலே சித்தம்துணித்துநீ
தாராளமாய்கூறுயினி மாறுமலேசிறுவுந்த
காட்டத்துடன் பசுக்கூட்டந்தனைமர்க்க
வாட்டமகிபாலன் வட்டவலவனை
நீட்டுமரசிக்கு காட்டிடுனைனுந்தனை
தீர்க்கமாகவர்யெந்தனை உறவாடவேபரிவாகினேன் (காட்ட)

பேடிசொல் தரு.

யென்னமொழியுரைத்தாய் பெண்ணே
கன்னிக்கரசியரே சின்னபயலுக்கு
வன்னரதமாது தன்னைதிருப்பவும் உன்னிதமாகுமோ (தரு)
சதமாகவேயிவைபேசவும் உதவாதினிவதிருபியே (யென்)

பணிப்பெண்சொல் கவி

சரசகெம்பீரதீரா சத்துருவந்து சூழ
அரசனில்லாதபோது ஆவுகண்தனை திருப்ப
துருசுடன்மைந்தன்போக துணிந்திட உதவிசெய்து
வரிசையாய்வாராவிட்டால் மனுநீதியல்லவென்று

வசனம்

கேளும் யென்பிராணநாயகரே அரசனில்லாதகாலத்தில் ந துசத்துருமேலிட்டு பசுக்களை கொண்டுபோகும்போது ராஜகுமாரன் அவர்களையடக்கி பசுக்களை திருப்பத்துணிந்து பாகநில்லாமல் தவிக்கும்போது [illegible]துவேளைநாமும் உதவிசெய்யாவிட்டால் இது நீதியல்லவே யென்பிராணநாயகா.

பேடிசொல்தரு

அன்பில்லாசொல்லும் வார்த்தையேனடிநான்வருந்தேன்
அன்னமே அடிசொர்ணமே
சுந்தரமேராஜகிட மைந்தனுக்குபாகனாக
சொல்லவே வகைபல்லவே
சூரமும்தயிரியதீரமில்லாதவன்போராது அதிலென்னசாரமுண்டு

துரோபதை சொல்-தரு.

நேசமாய் பாலனைவைத்து ராஜனை செயிக்கத்துன்பம்
நீ...ம் ...த்...யோர்குமே
...யாயொரு...ஷம் போஜனம்தந்துரக்ஷித்த
...வ...ம வாட...ருமே
அன்டிமேவந்திடக்கண்டு சும்மாயிருந்திடவும்
மன்னனே கனிநியீதுவகமோ (நேசமா)

பேடி சொல்தரு.

...பையனுக்குதேர்நடத்த தையலே நீவந்தழைக்க
ப்சமோ விசுவாசமோ
அய்யருணமாதரசே அய்யமில்லாவந்தழைக்க
துங்க... மணி-தங்கமே
சொல்லி... மல்லுப்புரிந்திடவும்
வல்லமைவிரியம் சொல்லவுங்காலம். (பைய)

துரோபதைசொல் தரு.

...ல்லாவீரதீர இப்படிமோடிசெய்தால்
உத்...மாதிட...த்தமா
செ...யபட்டத்தரசி அப்பனேதரச்செய்குவேன்
தீரனேறணசூரனே
சொல்லையுங்கண்டுமே ...சொல்வது...போலவே
வல்லவர்தங்களே வெல்வதுன்பாரம் (குப்பி)

வசனம்.

அப்படியேசெய்குரேன் நீபோய்சொல்லிவாரும். பிராணநா
யகி.

துரோபதைசொல் கவி.

அன்னமேயரசியுந்தன் அருமைசேர்மொழியைக்கொண்டு
வண்ணமாம்பேடிக்கிந்த வகையெலாமெடுத்துரைக்க

யென்னமோயேதோவென்று யெண்ணமுற்றவாறு சொல்ல
தன்னையுமரித்துமிப்போ சம்மதித்திடவந்தேனே

வசனம்.

கேளுமம்மாதாயே காணாந்தபேடியைக்கண்டு நடந்தவிதமெல்லாம்தெரிவித்தேன் யென்னமோயேதோவென்று யோசித்து உங்களுடைய உத்திவசனமிருந்தால் தேரோட்ட சம்மதிப்பேனென்று நிற்குறாங்களம்மா தாயே அப்படியே தாதிகளாலே பேடியை அழைப்பித்து சுதர்க்கனையம்மன் சொல்லுகிறாள் தங்காண்க.

சுதர்க்கனை சொல் தரு.

ராஜர்மெச்சும்பேடு மைந்தனோடு
நேசமாகக்கூடி ரதம்திருப்பி
ஆசையாககாடி பயமில்லாமல்
பாசமாகஓடி பகைக்கன்தன்னை (சுரு)
வாசமானநகர் கூடிடாமலவர்
வீசுமன்னர்தமை நாசம்செய்துபெற (ராஜ)

பேடிசொல் தரு.

என்னவார்த்தையம்மா துரியோதனன்
மன்னர்மன்னனம்மா உமதுமைந்தன்
சின்னபாலனம்மா சமர்புரிய
சொல்லன்போதுசம்மா மனம்தயங்க (அரு)
யென்னைகூட்டிமகன் தன்னைபேவிறல்
அன்னைபேஜெய மென்னமாகுமோ (யென்)

பொதுக்கவி.

உச்சிதமாமைந்தனையும் சிங்கதேற்றி
உத்தமிப்புஉத்திரனையலங்கரித்து
மெச்சிடவேபால்ரத்தி பலவும்சுத்தி
விருதுடனேமன் ன்போல் வரவுங்கண்டு
அச்சமில்லாபேடியுமேலாயமேகி
அதிவேகமாய் நடுமன்வந்தன்னை

கச்சுடனே கொண்டுவந்து ரதத்திற்பூட்டி
கடிகிரதமேரியவர் வெளிவந்தாரே.

வசனம்.

இவ்விதமாகபேடிரதமுரசமதிக்க சுதர்க்கணைமுதலானவரும் உத்திரகுமாரனை யுத்தகோலமாயலங்கரித்து ஆலாத்தியேந்தி திஷ்டிகழித்து சந்தோஷகரமாய் அனுப்ப பேடியானவர் தக்ஷண்யலாயத்திற்கேகி சுவேதவாகனத்துக் கொப்பான நல்லவேகத்திலுடைய நான்குபுரவிகளைக் கொணடுவந்து ரதத்திற்பூட்டி சிங்காரித்து பாகனுயிருக்கும் உத்திரபூபன் தாயை வணங்கிக்கொண்டு ரதமேறி நடக்கிறவிதங்காண்க.

உத்திரகுமாரன்சொல்தரு.

விட்டிடரதமதை உத்திரபாவை-காடி
பட்டுதருமுத்து கட்டிக்கொண்டு வாவென்றான்

பேடிசொல் தரு.

ராஜனேயிதுவாக்கு நல்லஜெயமுண்டுசீலா
தேசத்தில்கிடையாத சீரானநல்வாக்குமேலா

உத்திரகுமாரன் சொல்தரு.

பட்டணம்தாண்டினேம் தட்டிப்பரிகளைசீரா
கெட்டியாகாதம் விட்டுவாருமிகதீரா

பேடிசொல்தரு.

வெற்றிசெய்திடசி... முள்ளகுணசீலா-நாமும்
ரத்தினமயமான ரதம்விட்டேனே வேகபாலா

பொதுகவி.

நாடியேரதத்தைவிட்டு நகரமுங்கடந்துவந்தோம்
பேடியேஇங்குபாராய் பெரும்படையனேகமாக
கூடியேயிருப்பதென்ன குவலயமெல்லாம்வந்து
மூடியவிதமேகண்டு மொழிகுவாயறியத்தானே

வசனம்.

கேளும்தயிரியமுள்ள பேடியே நாமும் ரதமேரி பட்டணம் விட்டு வெளியேவந்தோமே இதோ வடகோடிகானகத்தில் பெரும்படையானது அனேகமாய் கூடியிருப்பதை யோசித்தால் யிந்த உலகமெல்லாமொருமிக்க கூடிவந்ததுபோலவே காணுகின்றது நீ இதை அரிந்திருந்தால் தெரியச்சொல்லும் பேடியே.

பேடிசொல் தரு.

ராஜனே தனிரதமீதி லேரியநல்மனதுடனே
மீறியதேச மறியாமற் செய்ய வேண்டியவந்த
துரியன்சேனைகளென்று அரியும்ராஜபாலா (சரு)
தேடியேவந்திடும் கூடியமாடுகள்
ஓடியேபோகிற வேடிக்கைபாரும் (ராஜ)

உத்திரகுமாரன்சொல் தரு.

பேடியேயிதோயிங்கே நீயடா
பெரும்படைகணக்குண்டோ காரடா
வாடுதேயென்மனம் வடகோடிவனமெல்லாம்
காடுமிடங்கொள்ளாதே கடல்போல்கிரைந்தசேனை (சரு)
காணவுமென்மனம் ஈரவுபாளுதே
ஆணுவம் நீங்கியே தோணுதேபயமும் (பேடி)

பேடிசொல் தரு.

தீரனேரதமேரிவந்திட சேனையைக்கண்டுமேஞெந்திட
வீரியமிதுதானோ வேந்தர்க்கழகாமோ
தேறியேயுன்மனம் திடத்துடனேயடித்து (சரு)
சித்திரசிலைதனில் பத்தியேபடைகளை
கத்துமுரிக்கியே வெற்றிகொள்வீர் (தீரனே)

உத்திரகுமாரன்சொல் தரு.

காணவேயென்மனம் அச்சமுங்கொடுக்குதே
கைகால்விடவிடென்று நடுக்குதே

தோளுந்தோளுதே சோக்கமுண்டாகியே
வீணமடியவோ வீரங்கூறிவந்தேன் (சரு)
மிக்கமிக்கஉடல் க்கத்தள்ளாடியே
திக்குதிக்குவென ஙிங்கைவேறுகுதே (கண)

பேடிசொல் கவி.

மாசிலாமணியேகேளாய் மனதச்சம்கொள்ளவேண்டாம்
காசினிமன்னரெல்லாம் காரியாகாரியத்தை
யோசித்துபரிவதெல்லாம் உடன்பட்டாலுயிரைதந்து
தேசத்துமன்னர்மெச்ச ஜெயம் பெறும்கீர்த்திதானே.

வசனம்.

கேளும்ராஜகுமாரகா நீமனதச்சம்கொள்ளவேண்டாம் ஒருகாலத்தில் இராதிபதிகளானவர் ஒருகாரியாகாரியத்தை யோசித்துதுணிவது அல்லதுஒருகாரியத்துக்குள்பட்டால் உயிரைக்குடுத்தாவது வெற்றிசெய்வது மண்ணுள்ளளவும் கீர்த்திக்கிடமாகும் அதையறிந்து தயிரியத்துடனே வாரும்அப்பா ராஜனே.

உத்திரகுமாரன்சொல் கவி.

வல்லவனேஒருவசனம் சொல்லக்கேளு
வடவன்னிதன்னையும் வெல்வதுண்டோ
கல்லையொருபூச் செண்டாலுடைக்கப்போமோ
கடல்நீரைவற்றசெய்யும் வீரருண்டோ.
சொல்வதுபோல் நானிந்தசேனைக்குள்ளே
துணிந்துசமர்செய்து வெற்றிசெய்வதேது
வல்லவனேயென்வசனம் தனைதட்டாமல்
ரதந்திருப்பிகரலைய வலை செய்வாயே.

வசனம்.

கேளும்பாபேடியே வடவாக்கினியையபுஷ்ப்பபாணம் வெல்லுமாமலைகளை பூச்செண்டாலுடைக்கத் திரப்படுமா கடல்நீரைவற்றச்செய்யும் வீரருண்டா அதுபோலநான் யெப்படிதுணிந்து யிந்த

சேனைகளை வெல்லப்போகுரேன் நீயென்வார்த்தையைத்தட்டாமல் ரதத்தைதிருப்பி யென்னைநடத்துனை செய்யுமப்பா தேர்ப்பாகனே.

பேடிசொல் தரு.

என்னபுத்திகள்நினைத்தாய் ராஜபோஜாவிஸ்வாசா
நீயுஞ்சங்கையில்லாமலே பங்கமென்றைமலே (யென)
மன்னர்மன்னவர்முன்னே வந்தோம் ரதம்நடத்தி (சரு)
மருவும்படையக்கண்டு அறுவும்பயமுங்கொண்டு
வாடிதயங்கமனம் ஓய்ப்ப துங்கலாமோ (யென)

உத்திரகுமாரன்சொல் தரு.

ஐயோஇதென்னகாரணம் பயமெடுக்க துயர்கொடுக்க
பேடியேயுன்னிடம் கூடியேவந்திட (ஐயோ)
செய்யாதகாரியத்தை செய்யத்துணியுமென்று (சரு)
செப்பவுமென்மனம் ஒப்புவதெப்படி
தேரிபிழைக்கும்வகை பாருங்கிருபைவைத்து (ஐயோ)

பேடிசொல்தரு.

தட்டாதே எந்தன்வார்த்தையை ரதமுடுக்கபயமெடுக்க
இனிதரிப்பதேது உயிர் விருப்பமில்லாமலே (தட்டா)

உத்திரகுமாரன்சொல் தரு.

எட்டாதகனிக்காக இச்சைகொண்டதுபோல (சரு)
ஏகவுமென்னுயிர் போகவும்பேடி நீ
எந்தனுக்கே யமனாக வந்திடவிதியோ (தட்டாதே)

பேடிசொல் கந்தார்த்தம்.

மண்டலமதிக்கமச்சமகிபதி நின்றபாலா
சண்டைநான்கெலிப்பேனென்று சவுரியத்துடனேவந்து
அணடியபடையைப்பார்த்து அஞ்சியோதம்திருப்பி
கொண்டுமேபோனவிந்த

பேடிசொல் தரு.

கொற்றவர்கையாரோ ஙகைகளைகொட்டி
கொற்றவர்கையாரோ
கொற்றவருமலகில் மற்றவரும்கைக்க
சித்தம்துணிந்துயிர் வைத்துயிருந்துமென்ன (சரு)
ஜீவனுக்கழிவில்லை பாவனையாகவே
தாவியேசம்தவிடும் சேவுகம்பாராய் (கொற்)

உத்திரகுமாரன்சொல் கந்தார்த்தம்.

என்னிடஉள்ளம்வாட இதக்கமில்லாதபேடி
தன்னிடஉரிதசற்றும் தடைபடாயென்றுமெண்ணி
உன்னிடமனங்கலங்கி முடிகியேயெழுந்திருந்து
பின்னிடகுதித்துமீறி,

உத்திரகுமாரன்சொல் தரு.

பேடியங்கேஓடிநான் உத்திரகுமாரன்
பேடிதயங்கஓடிநான்
பேடிகையிலேசிக்கி காடிப்பிழைத்தோமென்று
தேடிககைரநோக்கி ஓடி அதிவேகமாய் (பேடி)

பேடிசொல் கந்தார்த்தம்.

தன்னிஷ்டபேடியோராஜன் தாண்டியேகுதித்துபோக
என்னிஷ்டம் செல்லாதென்று எண்ணியே பேடிராஜன்
முன்னிடரதம்திருப்ப மொழிவசை தருமேயென்று
பின்னிட்டு பரிநடத்தி

பேடி சொல்தரு.

பிடித்தாகுதித்தேறினான் ருத்திரன் தன்னை
பிடித்துகுதித்தேறினான்
பிடித்து கொடிகம்பத்தில் அடித்து இருக்கிக்கட்டி
அடித்துப்பரிகள் தன்னை நடத்தி அதிவேகமாய் (பிடி)

உத்திரகுமாரன்சொல் கவி,

ஆடியேபாதாயிந்த அன்னீ தமுலகிலுண்டோ
பேடிவத்தநாளாகப் பிழைசெய்தயரியேன்பாவி
வாடியேதவிக்கயாலும் வந்ததன்னே கொடிகம்பத்தில்
நாடியேபிழைத்துப்போகும் கடத்தைக்குளென்னசெய்வேன்.

உத்ரகுமாரன்சொல் தரு.

தேடிஎன்னைப்பத்தி தேர்க்கொடிகம்பத்தில்-ஆதிமூலமே
பேடிஎந்தனைக்கட்டபெருப்பிழையென்செய்தேன் ஆதிமூலமே

பேடி சொல்தரு.

வெற்றிவிருதனைந்து வெளிப்பட்டு பயந்தோட ராஜபாலா
குற்றமிதைவிட குவலயந்தனிலுண்டோ ராஜபாலா

உத்திரகுமாரன்சொல் தரு.

வஞ்சகமிதுதானோ மர்மம்வைத்தேனே கொல்ல-ஆதிமூலமே
நெஞ்சினிற்குடிகொண்ட நேர்மையிதுதானோ-ஆதிமூலமே

பேடி சொல்தரு.

கொல்லநினைந்ததும் கொலைசெய்யத்துணிந்ததும்ராஜபாலா
யெல்லாமறியயின்னம் அரைநாழிகைக்குள்ளே ராஜபாலா

அர்ச்சுனன் சொல்-கவி.

சாரத்துடன் தேர்விடுத்து சடுக்கென வந்துவன்னி
மரத்தடிதனில்நிறுத்தி மன்னவா கட்டவிழ்த்தேன்
அரத்தினில் இருக்கதிரா ஆயுதமிருக்குதப்பா
திரத்துடன் மரத்திலேறி சீக்ரமாயெடுத்துவாராய்.

வசனம்.

கேளும் இராஜகுமாரகா இதோ அதிவேகமாக ரதத்தைக்கொண்டுவந்து வன்னிமரத்தடியில் நிறுத்தி உன் கட்டையவிழ்த்தேன் இந்த வன்னிமரத்திலேரி இதில்சிலஆயுதங்களிருக்கிறது அதைசல்லியா எடுப்பாய் ராஜகுமாரகா.

உத்ரகுமாரன் சொல்தரு.

சரசரென்றுமே வன்னிமரத்தை தாவியேறினான்
உத்திரபாலன தாவியேறினான்
உரமுள்ளபேடி யுரைத்தமொழியால்
திரமதுகொண்டுசிந்தை துணிந்துமே (சர)
நயந்தபேடியால் ஜெயம்தருமென்று
நம்பித்துணிந்தனே உத்திரபாலன் (சர)
பயந்தமனதும் தேரிதுணிந்து
பத்திக்[illegible]களை வைத்தழகுத்திய (சரச)
பஞ்சாயுதங்கள் கண்டுவெடுக்க
பக்ஷமாகிய உத்திரபாலன்
அஞ்சிடாமல் கிட்டிநெருங்கவே
அரவமாகிய சீரிவருகவே ([illegible]ச)
பாம்பாகியே சீரிவருகவே
பயந்துநடுங்கியே உத்திரபாலன் சென்று (சரச)
வீம்பாகவே பேடியகைக்கொண்டு
வெல்லவும் கொல்லவும் சொல்லவுமிது.

உத்திரகுமாரன்சொல்கந்தார்த்தம்.

ஆசைவாய் பேடியிந்த அரும்பிழைசெய்வதுண்டோ
பாசமாய்கண்டேன் பஞ்சவாளியும் பாம்பாய்சீறி
வீசிமேவரவுமென்னை விருதாவாய் கொல்லப்பார்த்தீர்
பேசுவாரிதையெடுத்து.

உத்திரகுமாரன்சொல் தரு.

பிடிக்கும்வீரர்களாரோ வீரவாளிதை
எடுக்கும்வீரர்களாரோ
எடுக்கும்வீரர்கள்தன்னை கடிக்குமரவமாக
முடிக்கும் திரம்தன்னை யிடக்குசெய்யவேவிதைத்து (பிடி)

பேடிசொல் கந்தார்த்தம்.

பிரபல்ய ஐவரிந்த்ர பிரசித்தம் தன்னையாண்ட
திரமையாய் மனம்பொராமல் துரியனும்சூதேயாடி
அரண்மனைபலவும்வென்று அனுப்ப ஆரண்யவாசம்
உரமாயீராறு நீங்கி யூராண்டு அக்பாதவாசம்
மரவாகசெய்யவேண்டி.

பேடி சொல் தரு.

வைத்த ஆயுதம்இதுவே பஞ்சபாண்டவர்
வைத்தஆயுதமிதுவே
வைத்தஆயுதமிது மற்றோரிதையெடுக்க
கொத்தும்பாம்பாகவே உத்தமர்சொற்படி (வை)

உத்திரகுமாரன் சொல்-கந்தார்த்தம்.

இந்தஆயுதமுன்கையில் எடுத்திடும் வேந்தருக்கு
வந்ததோ ஆரண்யத்தில் வாசமும் செய்திருக்க
சந்திரகுலத்தில்நல்ல சார்ந்ததோர் வீரரென்று
அந்தரம் பூமிமெச்சும்.

உத்திரகுமாரன் சொல்தரு.

அவர்களெங்கேயிருப்பாரோ ஐயையோபேடி
அவர்களெங்கேயிருப்பாரோ
அவர்களெங்கேயிருப்பார் யெவருங்கண்டரியாமல்
தவரில்லாஐவர் பவரும்செலுத்தவேண்டி (அவர்களெ)

பேடிசொல் கந்தார்த்தம்

அருமைபஞ்சவருந்தந்தை அரிகிலும்சுவர்ணவேலே
பெருமைசெய்யிடமுலாபம் பிசகாமலபாரிருப்பும்
திரமைசெய்யிடமும் கோவத்திரவிடமாயிருந்து
உருமைதேர்ப்பாகனாகி

பேடிசொல் தரு.

உன்னிடத்திலுமிருப்பார் உத்திரபாலா
உன்னிடத்திலுமிருப்பார்
உன்னிடத்திலும்சொன் தன்னிடத்திலும்தங்கி
முன்னதிரியராஜன் சொன்னகாலந்துலைய(உன்னிட)

உத்திரகுமாரன்சொல் வசனம்.

கேளும்பேடியே யென் தகப்பனரிடத்திலும் சுவர்ணகாற்மிடத்திலும் லாயத்திலும் பசுக்காவலரிடத்தி யென்னிடத்திலும் இருப்பதாகசொன்னையல்லவா அவர்களை இன்னார் இன்னாரென்று தெரியச்சொல்லும்பேடியே.

பேடிசொல் வசனம்.

கேளும்உத்திரகுமாரகா உன்தகப்பனிடத்தில் கெங்குபட்டராயிருப்பவர்தர்ம்மராஜர் பலாயனனயிருப்பவர் வீமருஜர் ராவுத்தனயிருப்பவன் நகுலராஜன் கோபாலனயிருக்கப்பட்டவன்சகாதேவன் உன்தாயிடத்தில் வண்ணமகளாயிருப்பவள் துரோபதையாகும் உன்னிடத்தில் பேடியாயிருக்கப்பட்டவன் நான்தான்அர்ச்சுன மகாருஜனப்பா உத்திரனே.

பேடிக்கும் உத்திரகுமாரனுக்கும்

தர்க்கம்-தரு.

பச்சவர்ணதிரேகமுள்ள தீரன்
பாரெல்லாம்கொடிமிகுத்த உச்சிதகெம்பீரன்
வச்சடி[illegible]ன்னடியை வைத்திடபதம்பெருவாய்
ராசவன்சுதனென்றும் கூசாமலுரைக்கவந்தாய் (பச்சை)

பேடிசொல் தரு.

சொன்னதுநிஜமென்னாதே பாலகீ
சோதித்தாலதிலிருக்கும் உண்மைதருப்மேலா
சின்னமேலேந்தும்மன்மதனை கண்ணினலெரித்தயீசன்
தன்னருளைப்பெற்றுவந்த தனஞ்செயபூபதியான(சொன்ன)

உத்திரகுமாரன்சொல் தரு.

ஆணுமில்லாபெண்ணுமில்லாபேடி முன்னே
அர்ச்சுனனழகைப்பார்க்க பார்வதியும்நாடி

காணவந்தான்யீசனுடன் கண்டுகொாக்ஷிதான்கொடுக்க
கண்டுரைப்பதேதுமொழி கொண்டுரைக்கவந்தாய்நீயும் (ஆனு)

பேடிசொல் தரு.

காலக்கேயரென்றுநவ கோடிசூரர்கண்டதுண்டு
பக்ஷம்செய்து மிக்கப்புகழ்தேடி
சாலமில்லாமல்தந்தை தன்னிடுக்கம்தன்னைமாற்றி
சங்கையில்லா கீர்த்திபெற்ற திங்கள்குலதீரனென (காலகே)

உத்திரகுமாரன் சொல்கவி.

முன்பின்னழகுநல்ல முதுகிலே மக்ஷரேகை
கண்ணெரியுடையநாவில் நக்ஷத்ரம் தர்மரேகை
பண்ணுமாவரிசைதந்த பரிசைவீணையும்விளங்க
சொன்னதெல்லாம்கண்டால் சொல்நிசமாகுந்தானே.

வசனம்.

அந்தஅர்ச்சுனராஜன் முன்னிலும் பின்னழகு முதுகிலே மட்சரேகை நாவிலே நக்ஷத்திரம்பல்லில்பரிசைவீணைகையில் தாமரை கமலம்பொருந்திய பச்சவர்ண முடையவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன் அதையெல்லாம் காண்பித்தால் உன்னுடையசொல் நிஜமாகும் பேடியே.

பொதுகவி.

அகிலமெல்லாம் நடுநடுங்க பார்க்கில்திரன்
அண்டர்முனிவோர்களெல்லாம் சொரிந்துவாழ்ந்து
முகில்கண்டகதிரெனவே முடிஜொலிக்க
முத்துமணி பச்சைகெம்பு பதக்கமின்ன
தகதகென ஆடைபரிமளங்கள்வீச
தங்கமணிகடகமிரு கரமிலங்க
மிகவதன பேடியுரு தன்னைநீக்கி
விஜயனுமே உத்திரன்முன் வருகின்றானே.

அர்ச்சுனன் சொல் தரு.

அண்டமண்டலமெல்லாம் கண்டதிசயித்திட
அதிபலவிஜயன்வந்தான் நல்லதன்னுருகொண்டு (அதி)
மன்னரிரைஞ்சிட அதிபலவிஜயன்வந்தான்
கண்டசரமும்செவி குண்டலம் தகதகென்ன (சரு)
கதிர்மணிமகுடமும் எதிர்வரும்சூரியன்
பதியெனபலவரும் அதிவிதமாக (அண்ட)
பட்டுதுராவுக்குச்சி முத்துகள் ளாபளென்ன
பதக்கம் தளதளென்னவே நல்ல
பச்சைநவமணி கச்சிதமுள்ளபதக்கம்
எட்டுதிக்கும்திக்கும் கட்டும்வடம்செய (சரு)
இந்திரதேவனும் சிந்தைகளித்திட
மைந்தனும்மன்மத சுந்தரமாக (அண்ட)
பச்சைவர்ணமிலங்க கச்சைவிருதுகட்டி
பரிமளமலர்வீசவே நல்லவாடைமிகுத்துமே
வேடிக்கையாகவே பரிமளமச்ச
ரேகையுமதிஉச்சித கெம்பிரதீரன் (சரு)
மாதவமுனிவனும் தேவனும்பூதல
நாதனுமெச்சிட நீதிலாதீரன் (அண்)
பேடியுருவமாரி நாடிமனம்பூரித்து
பேசுமன்னவரஞ்சவே நல்லபெலமது கொண்டுமே
நலமிதுவென்று பேசுமன்னவரஞ்சவே
தேடிக்காணவேவந்து தூரியன்மனங்கலங்க
சேஷ்டைகள் செய்துமே வாட்டமில்லாமலே
மாட்டைத்திருப்பவும் காட்டமதாக (அண்)

உத்திரகுமாரன்சொல் கவி.

ஐயனே அரவிந்தபாதம்போற்றி
அடிவணங்கி தங்களுக்குகப்பங்கட்டும்
துய்யனேயெங்களிடம் வந்துநீங்கள்
சூழ்ந்துபதம்வணங்குமந்தபாபய்சோ

செய்யாதகாரியங்கள் செய்திரையா
தெரியாமல்யேதேது பிழைசெய்தோமோ
மெய்யனே அதுகளெல்லாம் மனம்பொருத்து
மிகமகிழ்ந்து அடியாரை ரக்ஷிப்பீரே.

வசனம்.

சரணம்சரணமையா கர்த்தனே தங்களுக்கு கீழ்ப்படிந்தாக ப்பங்கட்டப்பட்ட யெங்களிடம் உருமாறிநாங்கள் பர்பத்தையடையும்படி யெங்களுக்கு கீழ்ப்பட்டு தொண்டுசெய்யலாகுமா அதனுலேநாங்களேதேது பிழைசெய்திருந்தாலும் அதையெல்லாம்மனம் பொருத்துரக்ஷித்தருளும்மகாராஜனே.

அர்ச்சுனன்சொல்தரு கொண்டிச்சிந்து.

பனேஉத்திரனே-ஆண்டு-அக்யாதவாசமது செய்திடவே செப்பும் துரியநாலே-வந்து-கீர்பெத்துகாலம்கழித்தோமே அதனுலேபாபமில்லே-யெங்க-அண்ணன்பாதங் கண்டோமல்லாமல்-சதபா யுன்தந்தைபாதம்-தனை வணங்கினதில்லே- மரத்தாலே-கீசகனைவீமன் மடித்தான்-இறந்திட-சிந்தைதுணிந்தானேயுன்-மன்னவனை காக்கவே வந்துநாமும்-பசுக்கூட்டத்தைதிருப்பவேரதமேரி-யெந்தனது காண்டிபத்தை-யெடுப்பேன்வீரரைசதைப்பேனே (தந்தின)

அர்ச்சுனன்சொல் கவி.

அப்பனேசஞ்சலங்களெண்ணவேண்டாம்
அதிவீரர்வன்னி மரம்தன்னிலேரி
செப்பரியகாளியம்மன் பாதம்போற்றி
சிலையுடனே தேவதத்தமதையுங்கொண்டு
தப்பிதங்களில்லாமல வந்துரதத்திலேறி
தந்தைபதம்நினைத்துமே கொடியுமேத்தி
ஒப்பிலாரதம்கடத்தஉபதேசித்து
உழவுகோல்கொண்டுரதம் நடத்துவாயே.

வசனம்.

வாருமப்பா உத்திரகுமாரகா சஞ்சலமில்லாமல் ரதத்திலே றும் விரோதாமும் வன்னிமரமேறி காளிகாபரமேஸ்வரியைஅனே கவிதமாகக்கொண்டாடி காண்டிபவில்லும் தேவதத்தசங்குமும் யெடுத்துக்கொண்டுவந்து ரதமேறி சிங்கக்கொடியைநீக்கி தேவ ராஜனை நினைக்கஅவராலே யெனக்குவந்த அனுமக்கொடியை ரத த்திலேற்றி தேர்நடக்கும்படியான மந்திரங்களெல்லாமுபதேசித் தேன் நீசாரதியாயிருந்து உளவுகோல்கொண்டு பரிகளைத்தட்டிஅ திவேகமாகரதத்தை நடத்துமப்பா குமாரகா அப்படியே தங்களு த்திரவினபடி ரதத்தைநடத்துகிறேன் சுவாமி.

உத்திரகுமாரன்சொல் தரு.

சந்திரகுலமன்னு கடிவாளமுளவுகோல்-பிடித்தேனே
தந்திரமறிந்துமே வேகமாகரதம்போக-விடுத்தேனே

அர்ச்சுனன் சொல்தரு.

ஆண்டுமேசென்றுநா ளதிகமென்றகாங் கொட்டினேனே
காண்டிபத்தின்நாசு கலைபவேகையினால் தட்டினேனே

உத்திரகுமாரன்சொல் தரு.

தட்டுமோசையெங்கும் முட்டவேநான்கிடு தாங்கினேனே
பொட்டென தேர்தட்டில்விழ்ந்துமே மூர்ச்சையாய் சோங்கினேன்

அர்ச்சுனன்சொல் தரு.

ஆவலாகவாரி பாலனைதேற்றியே சினந்தேனே
தேவதத்தமெடுத்து திருவாயில்வைத்துமே தொனித்தேனே

அர்ச்சுனன் சொல்கவி.

குறைவிலாமைந்தன் ராஜ குலத்திலேபிறந்து நீயும்
திரமதுசங்குநாதம் சிலையோசை தனைக்கிழித்தால்
வரவரயினியுண்டாகும் வகைக்கென்ன சகிக்கப்போறாய்
உரமுடன் மனதைத்தேற்றி உரமுடன்இருந்திடாயே.

வசனம்.

வாருமப்பா உத்திரபாலகா இந்தவில்லொலிக்கும் சங்கத்தொனிக்கும் கொடுதாங்கிமூர்ச்சித்தால் இனி நடக்கப்போகிற பேரொலிக்கும் பிரசண்ட பாணத்திற்கும் நீயென்ன சகிக்கப்போகிராய் நீ ராஜகுலத்தில் பிறந்தவனுச்சுதே உனக்கு அச்சமுண்டாகுமா உன் மனதை தேற்றிக்கொண்டு திடத்துடனே ரதத்தை எதிரிலிருக்கும் ராஜகூட்டத்தின்பேரில் செலுத்துமப்பா குமாரகா அப்படியேமனதைதேத்திக்கொண்டு ரதத்தை திருப்புகிறேன் சுவாமி இப்படிதேர் நடக்கிறசமையத்தில் இதைக்கண்ட துரியபூபன் சொல்லுகிற விதங்காண்க.

துரியோதனன் சொல்தரு.

கண்டீரோ ராஜதுரைமார்களே-இந்த
கடலுலகமதிர சங்கத்தொனி படுகென்றே
ஒண்டிரதம் வாரவிதம்பாரும் அவன்

உரிதிரிலேகண்டறிய பரமசிவனாரும்
கூட்டமுள்ளநம்மை எதிர்ப்பாரே-நம்மை
கொஞ்சமுமதிப்பில்லா வாறவீரன்பேரோ
நாட்டமுள்ள அவனுலகிலுண்டோ-இவன்
நம்மை ஜெயித்திடவும் வீரங்களுண்டோ
வாரவன்தனை என்னசொல்வேன்-அவன்
வந்தாலும்வரட்டுமிங்கே னவனைக்கொல்வேன்
காரமுண்டோயிவன்வந்துமென்று-நம்மை
தடுத்து ஜெயம்பெருவனென்று சொல்லுமண்ணாகர்ணா
தாத்தா குருபெரியோரே மாமா-நாலும்
சங்கைகொண்டுரைக்க நீங்கள் வாய்மடலாமா
சித்தர்ப்பதிவந்தெதிர்த்தாலும்-நம்மை
தீரமுண்டோ வந்தெதிர்க்கவெல்ல ஒருக்காலும்-கண்டி

வசனம்.

கேளும்பெரியோர்களே நம்முடையபிராண படையை மதியாமல் ஒண்டிரதம்விட்டு வரப்பட்டவன் யின்னானென்று அறிந்துச் சொல்லுங்கள் பெரியோர்களே.

வீஷ்மர்துரோணர்சொல்-தரு.

அவனிமன்னவரெல்லாம் அஞ்சவாரந்த
அருச்சுனராஜனுட மிஞ்சுவார்சிவனை
ஜெயம்பெற்றுதேவரை ரக்ஷித்ததீரன்
வரலாமோமற்றபேர்களு வருவருண்டோ (அவனி)

துரியோதினன்சொல் தரு.

வீரகுருவேவீஷ்மர்ச்சாரியே-நல்ல
வேந்தர்கள்வரமாட்டார்-மீறியே
பர்க்குணன்வர வீரம்படைத்தனவனென்று
பக்ஷமாகச்சொன்ன பிஷ்டாகண்டரியீரோ (வீரகு)

வீஷ்மர்சொல் தரு.

அனுமக்கொடியைப்பாம் தூரவே (அப்பா)
அச்சுனனவனென்று கூறவே
மன்னிலேயரியாமல் மஞ்சகம்பேசாதே
வார்த்தையுடனே வந்துசெய்வானே (அனுமக்)

துரியோதனன்சொல் தரு.

சரிசரிஅருச்சுனன் மன்னனே-வந்தால்
தாதாவேநலமுண்டு சொன்னனே
குறைவுநாளென்று கூறியேவாய்பூசி
மறுபடிவனம்போக । வழக்காடதிரமுண்டோ (சரிசரி)

வீஷ்மர்சொல் தரு.

சொன்னககாலம் தள்ளிபேச்சுதே-இது
சுயனாள திகழீதியாச்சுதே
வண்ணையானசுடர்மணி னு[illegible]லேப்பாருங்கள்
யென்னமாய்நீசொல்ல கிட[illegible]மண்டுகுறைற்றென்று (சொன்

துரியோதிரன்சொல் தரு.

வல்லவிஜயன்வந்தால் பாருமே-அவன்
வந்திருவென்னசாரமே
வெல்லும்திரமையெல்லாம் வெட்டவெளியதாக்கி
கொல்லாமல்விடுவனே கொடியபாணத்தாலே (வல்ல)

வீஷ்மர்சொல் தரு.

மட்டிலாஆயுதங்கூசுதே-எல்லா
மாமிசவாடையும்வீசுதே
கெட்டசகுனமிதுகேளும் யெங்கள்புத்தி
பொட்டெனபுரம்தந்து போவது நலமாகும் (மட்டி)

துரியோதிரன்சொல் தரு.

அளவில்லாதசேனைபெருக்க-நல்ல
ஆயுதங்கைதனிலிருக்க
யிளைக்காமல்முன்னின்று யெதிர்த்துக்கொல்லாமலே
உளவானமொழிசொன்னீர் ஓடிப்பிழையுமென்று (அளவி)

வீஷ்மர்சொல் கவி.

அலைகடலைகமண்டத்திலெடுக்குந்திரன்
அண்டமெல்லாமோரடி யாளந்தமாயன்
மலைசிரசைவஜ்ஜிரத்தால் உடைத்ததேவன்
மாளாதராவணனை மடித்தராமன்
தலமிசையில்புகழ்படைத்த துரியாயகேளும்
தனஞ்செயன்கைபாணமெல்லாந்தகிக்கும்
சேனைபலமுடை யோரென்றெதிர்த்திட்டாலும்
சாழித்துபோய்விடுவாய் சொன்னோம்சொன்னோம்.

வசனம்.

கேளும் துரியராஜனே அலைபொருந்திய சத்தசமுத்திரஜெல த்தையெல்லாம் கும்பமுகமண்டலத்தில் அடக்கினார் அளவில்லாத மூலபலமுதலான ராவணாதிகளை சாரதருமமூர்த்தி ராமபாணத்

தாள் அவர்களுடைய கெர்வத்தை பங்கம்பண்ணினோர் அதிபால மனவயிராக்கியங்கொண்டு விடுபட்டசிங்கம்போலும் வருகின்றதி னஞ்செபன்கை ஒருபாணத்திலே தகிக்கும்படியான பதினோரக் ரோணிசேனை பலத்தையும் சதமாய்பாவித்து பங்கபடுமுன்னமே ஓடிஜெயம்பெருவதே லெட்டசரும் பெரியவாள்சொல்லை தள்ளவேண் டாம் துரியபூபனே.

துரியோதிரன்சொல் கவி.

வாதானஅளவிரந்த சேனைக்குள்ளே
வந்தொருவன் ஜெயம்பெருவானென்றுசொல்லும்
ஆகாயம்தணைப்பறந்து யெடுக்குமென்றே
...கண்டறிந்தேன் ஆகா ஆகா
கோகாமலிருப்பவர்வ...வனை பண்டி
ரோஷமுடன் வந்தெதிர்த்தபோதுங் கொல்வேன்
சாகாதபேர்களெல்லா மோடிப்போர்கள்
சவுரியத்தையிப்பொழுதே காட்டுவேனே.

வசனம்.

கேளும் குருபெரியோர்களே அளவிறந்தசேனைக்குள்ளோ ராஜபத்தினியைதுயிலுரிந்த காலத்தில்நாங்கள் அவன்சவுரியத்தை கண்டிருக்கிறோம் கானகம்சென்று காய்கனிகந்தமூலத்தையுண்டு சனைநீரைப்பொசித்து பெலனத் தஆரோ அர்ச்சுனன்வருகுராணும் அவனுக்குபயந்து ஓடிபிழையென்பது என்னதன்மையாயிருக்குதெ ன்றால் பட்டம்பகலிலே ஆகாயத்தைதபறந்து யெடுக்குமென்பது போல நீங்கள் சொல்லவந்தீர்கள் ஆகாபனாபனாய் நல்லவார்த்தை சொன்னீர்கள் நீங்களெல்லாமவனுக்கு சகாயமாய் கூடிவந்தாலும் கொல்லுவேன் சாகத்துணிந்தாலுஞ் சாகப்பயந்தவர்களெல்லாப் ஓடிப்போங்கள் யிப்போதேயென் சவுரியத்தைப்பாருங்கள் பெரி யோர்களே யிப்படி துரியராஜன் கடிந்துச்சொல்ல யெந்தகாரியமு ம்வந்து யோசிக்கலாமென்று பேரிபோர்களெல்லாம் விசனமடை ந்திருக்க கர்ணன் சகுனிசொல்லுகிற விதங்காண்க.

கர்ணன் சகுனிசொல் தரு.



மாடுபிடிசண்டை.

இந்தவார்த்தை சொல்லலாகுமோ
நம்மைவந்து விஜயன் வெல்லப்போகுமோ
எந்தநாளும் பெரியோர்
இஷ்டம் பாண்டவர்மீது
இருக்குமிதனாலுண்டோ வழக்கமுன்போல்சொல்ல (சரு)
ஈடிலாமல் கோடிவீரியர் கூடியிருக்கவும் நாடிஒருவனை (இந்)
ஓடினாலு பாகமல்லவோ-மன்னு
கூடி இவர்கள்போல சொல்லவோ
தேடிவந்தோமிங்கு தேர்விஜயனைக்காண
திகைத்தபெரியோர்போலே ஜெகத்திலிவாருண்டோ (சரு)
சின்னமெண்ணமேலோ சொன்னவழிவுகள்
என்னசொல்லார்மன்னர் மன்னனே (இந்த)
அச்சமில்லாவீரங்காட்டுவோம்-இவனை
கெச்சக்காயைப்போல வாட்டுவோம்
மெச்சவேனும் தேர்வீரியனைக்கண்டு

சொல்லுவோம் கொல்லுவோம்
செல்லவேவிடைதாரும் (சரு)

வேதமோதிய ஜாதியல்லவே
தீதையெண்ணியே வாதைகொள்ளவே (இந்த)

திங்கள்குலவல்ல தீரனே-இப்போ
எங்கள் வீரம்பாரும்மாரனே
சங்கைகொளாதும்பேர்கள் தன்னை நீ நம்பாதே
சட்டமாய் நடுவேயாத்தில் கட்டுமாம்பிரிப்பார் (சரு)

சண்டைசெய்யவே ரெண்டுமறியார்
கண்டு அஞ்சுவாருண்டோயுலகினில் (இந்த)

கர்ணன் சொல்கவி.

வாட்டமில்லாதமன்ன மகிழ்ந்தொரு வசனம்கேளும்
கூட்டமாய் பெரியோரெல்லாம் கூடியேபடைஎழுப்பி
காட்டமாய் சமர்துடங்க நமக்கென்ன வென்றப்போது
ஆட்டுவார் கைகபற்றை அரிபலாம்மெய்பொய்யோடும்.

வசனம்.

கேளும் துரியோதனமகாராஜனே இந்தப் பெரியோர்களெல்லாம் கூட்டமாயிருந்து ஒருவர்மீது சண்டைக்குப் போகலாமென்று தூண்டிவிட்டு சண்டைக்கு முனையும்போது நமக்கென்ன போவென்று தலைகுனிந்து கண்டு பயிரைக்கொண்டு ஆட்டுவார்கள் இது மெய்பொய்யும் இப்போதே கண்டுக்கொள்ளலாம் துரியோதனமகாராஜனே.

யெங்குருவிரைந்திட சாங்கோபசாங்கமாய்
யிடில்லாதபாணம் மீட்டினேன்
காரியமரியாமல் கடிஇவங்தெதிர்திட் (சரு)
கணடுகோபமும் கொண்டுவந்தேனே
அண்டிவந்தெனை தண்டம்செய்யாதே (யேதி)

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

ஒருரதம்தனையழிக்க ஓடியேதிடமிகுத்து
பருரதம்பெரிவந்து மட்டிலாசரங்களேவி

துரிதமாய் வந்தெதிர்த்த சூரத்தையறியவேண்டி
அரிதானபாணமீட்டி

அர்ச்சுனன்சொல் தரு.

அடித்தேன்பாராய் ரதத்தைதூளாய்
உடைத்தேன்பாராய்
மடித்தேனேபரிகளும் மட்டில்லாசேனையும்
துடித்திடயுன்மனம் துணிவாயெதிர்த்திட (அடித்)

கர்ணன்சொல் கந்தார்த்தம்.

௬. சாரதியையும் சேனையும் தானுமேயழிந்தபோது
வேறொருரதத்திலேறி வில்வளைத்தெதிர்த்து நின்று
பாரெல்லாம் நடுநடுங்க பாணங்கள் தன்னைவிட்டு
கூறுகூறாகவெட்டி.

கர்ணன்சொல் தரு.

கொல்லவந்தேனே உந்தனையிப்போ
வெல்லவந்தேனே
நல்லதுஇனியுன்னை நான்விட்டுவிடுவேனோ
வல்லமைபேசாதே மடிக்கச்சரமெடுத்தேன் (கொல்ல)

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

வரவிடுபர்ணமெல்லாம் வாட்டியேகோபங்கொண்டு
திரமுடன்பரிதேரெல்லாம் சின்னபின்னங்கள் செய்து
காரமுடன்கர்ண்ணு மீயும்கடிகியேபயந்துஓட
விரைவாகபாணமீட்டி

அர்ச்சுனன்சொல் தரு.

வெற்றிகள்பாட படைகளெல்லாம்
மெத்தவும்ஓட
இத்தமுங்கொதித்துமே ஜெயம்பெற்றவிஜயனை
சற்றுமஞ்சாமலே சகுனிவந்தெதிர்த்திட (வெற்றி)

சகுனிசொல் கந்தார்த்தம்.

கர்ணனும்படைமுரிந்து கால்கடையாகஅஞ்சி
பின்னிடகண்டுமீறி பெரும்படைதன்னைகூட்டி

னன்னிதாதத்திலேறிஉச்சிதனிலேவாளேந்தி
தன்னிகர்க்கிணையில்லாத

சகுனிசொல் தரு.

சகுனிவந்தெதிர்த்தேனே விஜயராயுன்மேல்
மிகமனம்பகைத்தேனே
ஜெகமெக்கும்கொடியெத்த திரங்களரியாமல்
வகையாகயெதிர்செய்ய வந்தவிஜயாகிலும் (சகுனி)
க்ஷத்ரியவல்லமை தேரைமுடிக்கியே
சூரியமைந்தனும் வீரியமாக அணி
முத்துக்குச்சுகள்மின்ன முடியும்பளபளென்ன
சத்தபேரிகை டங்கா டம்ரகம் இடுகிடென்ன (சகு)
தண்டமிலங்கிட குண்டலமசையவே
மண்டலமஞ்சிய சண்டனைப்போல (அணி)
அதிரபூமிகளெல்லாம் ஆனைசேனை நடக்க
பதரிக்கொக்கரித்துமே படைவீரர்புடைசூழ (சகு)
பண்டுபலாதிகள் உண்டுமேவீரியம்
கொண்டவனேவலு கண்டவனென்று (அணி)

கர்ணன்சொல் கவி.

வெத்திசேர்மன்னனென்று விஜயனேமனதிலச்சம்
சத்துமஞ்சாமல்நீதான் தனிரதம்தன்னைவிட்டு
சித்தமும்தெளிந்துநீநீ சேவகம்செலுத்தவந்தாய்
பத்தியேபாணத்தாலே பறக்கவேயடிப்பேன்பாராய்.

வசனம்.

கேளாய் விஜயனே வெத்திபொருந்திய துரியோதனராஜனென்று மனதிலச்சமில்லாமல் ஒண்டிரதம்விட்டு துணிந்துவந்தாயல்லவா. இதோ என் கையபாணத்தாலே அடிக்கிறேன் பாரடா ராஜனே.

அர்ச்சுனன் சொல்தரு.

உதட்டியாகவந்த பதட்டமுடையகர்ணா
உத்தனை நான் விட்டுவிடுவனோ
உலகத்தில்மிக வெத்திபுகழ்பெத்தவனும் நீயே
உனக்கஞ்சினாலும் பின்விடுவேனோ
அதட்டி அதட்டிவந்த ஆணுவமரியவே (சுரு)
அண்டிதனுசையும் மண்டிவாங்கியே
கண்சரமது கொண்டுயேவினேன் (உதட்டி)

கர்ணன் சொல்தரு.

எங்களைமதியாமல் பொங்கமாய்ரதம்விட்டு
எதிர்த்தவிஜயதீரா கில்லடா
தங்காமலடிக்கடி சங்கத்தொனிமுழங்க
சமர்த்துப்பேசுவதென்ன சொல்லடா
வெங்கோபம்தங்காமல் வெகுண்டுவில்லைவளைத்து (சுரு)
விட்டேனேசர மட்டில்லாமலே
கிட்டியுந்தனை வெட்டிஎரிகுவேன் (எங்களை)

அர்ச்சுனன்சொல் தரு.

வெற்றிவிஜயனென்று சற்றுமறியாமல்
வெகுண்டுவந்துவுன்னை வாட்டவே
விருதுகொடியும்தேரு பரியும்சாரதிஞளாய்
வெட்டியெரிய பாணமீட்டவே
சுத்திபடைகளெல்லாம் துண்டித்துதண்டித்து (சுரு)
தூத்திவிட்டேனே காத்திலோடவே
பார்த்திடும்உயிர் மாத்தவந்தேனே (வெத்தி)

கர்ணன் சொல்தரு.

எரியோரதம்போக வேறொருரதம்
எடுத்துவில்லில்பாணம் பூட்டினேன்

அர்ச்சுனன் சொல் தரு.

துடியாதுரியன் தொன்னூத்தொன்பதுபேர்கள்-உத்திரபால

உத்திரகுமாரன்சொல் தரு.

படியிலரசர்தம்மை மத்திமகிழ்ந்தேனே-ருஜதீரா

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

சுந்தரஉத்திரபாலா தொழுதடிவனத்தில்வந்து
யிந்நாளிவ்விடம்வந்தோம் யெழிலானபெரியோர்பாதம்
விந்தைகாண உபம்வாங்கி விமலதேவர்கள்கொண்டாட
வந்தனபாணமூன்று

அர்ச்சுனன்சொல் தரு.

மலரடிபூசைசெய்யவே பன்னீரைக்கொண்டு
மாமலர்மாரிபெய்யவே
வலமாககசுத்திவந்து வணங்கிஅர்ச்சுனனிதோ
வந்தான்வந்தானென்று நந்துசேதிசெவியில் (சரு)
வாட்[illegible]மிலாமலே காட்டியேமகிழவும்
நாட்டமாயப்புரம் கூட்டமும்வந்திட (மலரடி)

வசனம்.

வாருமப்பா உத்திரகுமாரகா பெரியோர்களை வணங்கிஆசீர்
[வா]தம்பெற்றுக்கொண்டேன் யிதோப[illegible]கபோகுரே
[நீ]ங்கமது ரதத்தைநடுவழியாகச் செலுத்தி யிதோஅஸ்திநாபுரிமா
[ர்]க்கமாக போகாநின்ற பசுத்திரள்களை திருப்பி பசக்கூட்டம்மு
[ழு]துதாக கொண்டுவந்து சேருந்துமப்பாகுமாரகா அப்படியேதங்க
[ள்]நகராப்படிக்கி கொண்டுவந்து சேர்த்தினேன் மகாராஜனே.

அர்ச்சுனன்சொல் தரு.

கூரும்புகைபாணமெடுத்தேன் யிப்பவும்
கொப்பெனயிருள்மாந்த கப்பவும்பெரும்படைகள்
அப்படியிப்படியென்று செப்பவுமில்லாமல்
சாரதிரதத்தைமூடுக்க வேகமாய்
சக்கரம்கிருகிரென்று மிக்[illegible]வசமுன்றிடவும்

பல்லென வருசேனைகள் சக்கை சக்கையாக்கிடவே
ராமபாணம்போல்சீறியே சிலவுபோல்நாடியே
பசுத்திரள்மீளாடியே ரதம்திருப்பும்கூடியே

மூடிக்கண்முழிக்குமுன்னே போனவழியாத்திருப்பியே
வானந்தைசேரபொங்கமாய் ரதமுமுன்புதங்குமிடம்வந்திருக்க
செங்கதிருதயம்போல எங்குமேஜோதிஜோலிக்க (கூறும்)

பொதுகவி.

மைகாட்டிவிஜயராஜன் மாடுகள்தன்னையெல்லாம்
கைகாட்டியெடுத்தாப்போல கடிகியேதிருப்பிக்கொண்டு
மெய்காட்டியெடுத்து நின்றவிந்தையதெல்லாங்கண்டு
பொய்காட்டுமன்னரெல்லாம் போர்செய்யகர்ணன்வந்தான்

கர்ணன்சொல் தரு.

அணிமுத்தமணிமாலை பணிகள்பளபளவென்ன
அதிபலகர்ணன்வந்தான் சமர்புரிய (அணி)
கணிதத்திட்டமகாத கரிபரிசேனைசூழ (சரு)
காட்டியவீரியம் மீட்டியபாணமும்
வாட்டுவேனென்றுமே மேட்டிமையாய்பேசி (அணி)
வல்லிவிஜயபூபா நில்லுநில்லுமிப்போதே
கொல்லுவேன்பாரென்று கோலாகலமேப்போல (சரு)

துரியோதிரன் சொல்கவி.

தம்பினேனுங்கள்வார்த்தை நல்மாமாகர்ணா ஆ ஆ
அன்பதுபலகைசேர்த்து ஆணியிட்டதுபோல்சொன்னீர்
இன்பமில்லாதவார்த்தை எப்போதும்பெரியோர்சொல்லே
வம்பானதென்றறிந்தேன் வந்தொருமுத்தம்தாரீர்.

வசனம்.

கேளுமாமா சகுனி அண்ணா கர்ணராஜனே உங்கள்வார்த்தை நிச்சயமென்றே நம்பியிருக்கிறேன் அதைப்போலவே அன்பதுபலகைசேர்த்து ஓராணியைத்தைத்துபோல நல்லவசனம்சொன்னீர் ஆ ஆ பீஷ்மர் துரோணர் விதுரன் அஸ்வத்தாமன் முதலான பெரி

யோர்கள் எப்போதும் எனக்கின்பமில்லாத வார்த்தை சொன்னது வழக்கந்தான் இந்த விஜயனுக்குப்பயந்து ஓடிப்பிழைப்புமென்றீர் கள் உங்களைப்போல வீரவைராக்கியம் சொல்லுவாருமுண்டோ சந்தோஷம் சந்தோஷம் கிட்டவந்து ஒரு முத்தம்தாருங்கள் சகுனிகர்ணா.

விராமகாராஜன் சொல்கவி.

கூடியேயிளும் பொய்யாக் கூறிய துரியாகேளும்
சாடியபோது பார்த்தால் தலையாட்டிகேட்டுனெல்லாம்
நாடியேயிபோது வாய்பேசி நாங்களும்வார்த்தையாட
பேடியென்றுரைத்தாயப்பா பேசாமல் வாயைமூடும்.

வசனம்.

கேளும்துரியோதனா புத்திமான்களெல்லாம் ஒருமித்து நிசத்தை பொய்யாகவும் பொய்யை நிசமாகவும் உட்கொண்டு கள்குடியரைப்போலே இகழ்ந்து தலையாட்டலாமா அல்லது வரப்பட்ட அர்ச்சுனன்பாணப்பிரயோகத்தினாலே சண்டமாருதம்போல்வர அந்த விலக்கப்பட்ட இலவம்பஞ்சு பரந்தோடும்போதல்லவா நன்மை தீமை புத்தியிலுறைக்கும் அதுயிருக்கட்டும் நீங்கள் சவுரியம் செலுத்தும்போது நாங்களே பேடியோ அப்படியே சண்டைசெய்வோம் சும்மா பேசாதே வாயைமூடும் துரியோதனாவென்று சொல்லியிருக்கும்போதே அர்ச்சுனன் ரதத்தைமுன்னமே கொண்டுவந்து நிறுத்தி உத்திரகுமாரனைப் பார்த்து சொல்லுகிற விதங்காண்க.

அர்ச்சுனன் சொல்தரு.

பங்கும்பங்கா[illegible]கள் [illegible]ட்டன்மாரைப்பாரும் (உத்திர)

உத்திரகுமாரன் சொல் தரு.

அங்கமடிக்குடை[illegible] அவரூரோசொல்லய்யா (ருஜதீர)

அர்ச்சுனன் சொல்தரு.

பணைக்கோடி படைத்[illegible]வர் பாட்டன்வீஷ்மாச்சாரி (உத்திர)

உத்திரகுமாரன் சொல்தரு.

இலத்தியம்வேறுக இருப்பவருரைய்யா ரு(ஜதீரா)

அர்ச்சுனன் சொல்தரு.

அருமைகுருதுரோணர் அஸ்வன் கிருபாச்சாரி (உத்திர)

உத்திரகுமாரன் சொல் தரு.

பெருமைக்கீர்த்திய இருவருமாரையா (ருஜதீரா)

அர்ச்சுனன் சொல்தரு.

வடி... ணனும் மாமன் ஜகுனிராஜன் (ருத்திர)

உத்ர...ரன் சொல்தரு.

நெடிமுடிபடைந்த நீதிபராசனே ரோ (ருஜதீரா)
சங்கதசக்கைபாய்வாட்டி தண்டிக்கதிரமுண்டு
மிக்கமிக்கவெவெகு வீரியம்பேசலாமோ (சக்கை)

அருச்சுனன்சொல் கந்தார்த்தம்.

சகுனிமன்னவனேயுந்தன் சமர்தெல்லாமறிந்திருப்பேன்
தருமினியுன்னேயிப்போ தண்டிக்கயெண்ணங்கொண்டேன்
செகமெலாம்நடுநடுங்க சேனையுமுறிந்தோட
வெகுவாகநோகசெய்து.

அருச்சுனன்சொல் தரு.

வெற்றிசெய்தேன்பாரும் அரும்சரங்களைமீட்டி
வெற்றிசெய்தேன்பாரும்
வெற்றிசெய்தேநல்ல வீரா தமழிக்க
தத்திபுரங்கொடுத்து சகுனியுய...ஓட (வெற்றி)

வசனம்.

இப்படிசகுனிராஜ்ன் புறங்கொடுக்க ...ராஜன் சண்டைக்கு வருகிறவிதங்காண்க.

துரியோ...தனன்சொல் தரு.

விஜயராஜனேயென் ... ண திரினில்வந்து நில்லடா
வீரமாகவேபேசுவதென்ன ... சொல்லடா (சுரு)
விண்டலமண்டலம் கண்டுநடுங்கிட
கொண்டேனே இலகரம் தண்டனைசெய்கிறேன் (விஜ

அர்ச்சுனன்சொல் தரு.

துரியராஜனேயென் னெதிரில்வந்[illegible]ரடா
துண்டம்துண்டமாய்படைகளை வெட்டினே[illegible]பாரடா
தாக்கியசிலீகரம் கோக்கிபோ[illegible]ணமும்
மாய்க்கவும்வந்தேனே [illegible]கிரமாக (துரிய)

துரியோதனன்[illegible]சொல் [illegible]ரு.

காலதண்ட[illegible]மும் வேலுகள்
தாக்கிதேன்கண்டி[illegible]துவில்லேலனேக பாணம்வாங்கினேன் (சுரு)
கத்திகேடயம்பத்திய படைகளும்
சுத்திலும்சூழவே வெற்றிகள்செய்ய (காலக)

அர்ச்சுனன்செல் தரு.

ஏளிதமாகவேவந்திடுதிரனே
ஏவியஅஸ்த்திரம்தன்னைத் தடுத்துமேவீரனே (சுரு)
யெங்குங்கிரைந்துமே பொங்கியபடைகளே
மங்கவும்வாட்டுவேன் தங்கவுமுண்டோ (ஏளி)

திரியோதிரன்சொல் கவி.

என்[illegible]டாவிஜயாக்தான் எங்களை மதித்திடாமல்
உன்[illegible]செருக்[illegible]பண்ணி ஒருவனுப்வந்தெதிர்த்து
கர்ணனே; செயி[illegible]தோமென்று கவனித்துயெனையெதிர்த்தாய்
சின்னபின்னமதாய் வாட்டி சிரசைகண்டிப்பேன்பாராய்.

வசனம்.

அடேவாடா விஜ[illegible]ராஜனே நீயெங்களைசற்றேனும் மதிக்காமல் ஒருவனுகவேவந்தெதிர்த்து [illegible]ராஜனை யினைக்கச்செய்தோமென்று அதுபோலவே யென்னையும்வந்தெதிர்த்தாய் யினி யுன்னை சின்னபின்னப்படுத்தி உன்சிரசை கண்டிக்குமோன்பாரும் விஜயராஜனே.

அர்ச்சுனன் சொல்தரு.

கள்ளச்சூ[illegible]றெண்ணிவந்தீரோ-மாமா
கர்ணன்மு[illegible]பமனம் கொண்டீரோ
விள்ளச்சொல்லினேனென்னை வெல்லமுடியாதென்று
வேடிக்கைபா[illegible]சி ஓடிப்பிழைக்கலாம் (கள்)

சகுனி சொல்தரு.

மெத்தப்படைகள் கண்டுமே[illegible]யும்
வெற்றிசெய்யவே வீரங்கொண்டுமே
ஓத்தைரதம்விட்டு கெத்துபேசவந்தாய்
உந்தனைமுடிக்கவே வந்துவில்லெடுத்தேனே (மெத்த)

அர்ச்சுனன் சொல்தரு.

சூதாடியே குடிகெடுத்தாய் இப்போ
வர[illegible]வேவந்து அழித்தாய்
ஏதேது செய்தாலும் இட்டவிதியைதப்பி
இல்லாதுவாரூது வெல்லவுன்னாலாமோ (சூதா)

சகுனி சொல் தரு.

கண[illegible]ரலே நில்லடா (மி[illegible]க)
மீண்டுபோரதுண்டோ சொல்லடா
தாண்டியேமெத்த சவ[illegible]ம்பே[illegible]த
சரமிதோமீட்டிடுமே வரவிட்ட[illegible]போரிதோ (தாண்டி)

அர்ச்சுனன்சொல் கவி.

வஞ்சகசகுனிமாமா வல்லமைவீரங்கூ[illegible]
அஞ்சாமல்வந்தெதிர்த்து அருஞ்சமர்[illegible]புவந்தாய்
மிஞ்சியேபாணமீட்டி மேதினிஎன்ன[illegible]செய்வேன்.
பஞ்சுபஞ்சாகவாட்டிபறக்கவே யடிப்[illegible]பன்பாராய்.

வசனம்.

கேளும்ஜகுனிராஜனே நீமெத்தசவுரியங்கூறி சற்றும்பயமில்லாமல் வந்தெதிர்த்து போராடச்செய்யுமுன்னே அனேகபாணப்[illegible]

ரயோகஞ்செய்து உன்சேனைகளையும் உன்னையும் பஞ்சடஞ்ச[illegible]
க்க அடிக்கிறேன் பாரும் சகுனியே.

சகுனி சொல் தரு.

வில்லை வளைத்து பாணமிட்ட[illegible]னே விஜயராஜனே
வெற்றிசெய்யவே சித்தம் [illegible]ணிந்தனே (வெ

[illegible]ர்ச்சுனன் [illegible]சால் தரு.

சித்தம் துணிந்தீரா சகுனிராஜனே உத்தமனையிப்போ
தேரிபாணத்தால் மீறியடித்தேனே (சித்

சகுனிசொல் தரு.

அடித்தபாணத்தை தடுத்துமீறியே விஜயராஜனே
அர்த்தசந்திரபாணம் விடுத்தேனே (அ

அர்ச்சுனன் சொல்தரு.

சந்திரபாணம் தன்னைவெட்டியே சகுனி[illegible]ஜனே
தலைவிடுபே[illegible]கைகளை[illegible]த்தேனே (ச

சகுனிசொல் கந்தார்த்தம்.

எடுத்தபாணத்தைவெட்டி இமையவர்களைவாட
கொடுத்துநான் அனேகபாணம் அந்தரமிடேரிபாட
கத[illegible]வங்கிதடுத்து காண்டிப தீரயுன்னை
தடுத்தொரு பர்தேரெல்லாம்.

சகுனிசொல் தரு.

சக்கை சக்கையாய் வாட்டவே இதோ ஜூட தாணம்
சக்கை சக்கையாய் வாட்டவே

அர்ச்சுனன்சொல் தரு.

சூதாட்டமென்றுமே துணிந்தாயோ-துரியா
சொல்லுச்சண்டாளை லேசாய் நினைத்தாயோ

வாதாட்டம் செ[illegible]துமே மடிக்கத்திறமல்ல
வல்லமையொ [illegible] யே வெல்லுவதரிதாகும் (சூதாட்)

துரியோதனன் சொல்தரு.

கெட்டிக்காரனுகவந்த[illegible]சையா
கெலிப்பாகமன மொழி தந்த[illegible]ா (தரு)
வெட்[illegible]க்கவும் வி[illegible]யமெனக்குண்டு
வெத்திசெய்தோமென்று சந்தோஷிக்காதே (கெட்டி)

அர்ச்சுனன் சொல்தரு.

காண்டிபத்தில் பாணம்தொடுத்தேன்-நீயுங்
கண்டு நடுங்கக்கோடி விடுத்தேன் (தரு)
ஆண்டிப்படைதேரு சொல்லியபடையெல்லாம்
அம்சமாய்பறக்கவே கிபிஷத்தி[illegible]டித்தேனே (காண்)

துர்யோதிரன்[illegible]சால் தரு.

[illegible]ரியும் க[illegible]டேனே-நானும்[illegible]
பயந்[illegible]மோ[illegible]ணமட்டேனே [illegible]
இடைவி[illegible]ப்பா[illegible]யவும்திரமுண்டு
எடுத்தொருபாணந்தைத் விடுத்தேனே யுனைக்கொல்ல (எ[illegible])

அர்ச்சுனன்சொல் வ[illegible]த்தம்.

வெல்லவே துரியராஜன் விட்டபாணத்தைவாட்டி
வல்லமைபீஷ்மர் துரோணர் வந்தெதிர்த்தவரையெல்லாம்
சல்லடைக்கண்கள்போல சரமேவி துளைக்கும்போது
எல்லோரும் புறங்கொடுத்து

அர்ச்சுனன்சொல்தரு.

எங்கெங்குமோட விஜயன்பாணம்
அங்கங்கோ—

பங்கம்வர அதென்று பார்த்துப்பட்டணக்கேட
பொங்கிவிஜயன்வெற்றி சங்கத்தொலியும்பட (௭௧)

அர்ச்சுனன்சொல்வசனம்.

கேளுமப்பா உத்திரகுமாரகா துரியோதனும்யாவரும் புறங்கொடுத்தோட நாணிதோ பிரமுகா அவ்வேம்விட்டு துரியோதனன்முடியில் சூடிகாக்கிஉத்தரை வேண்டிக்கேட்ட முத்துதுருப்பட்டுச்சேலையும்வாங்கிக்கொண்டுவரும்படி செய்து அதனையும் பெற்றுக்கொண்டு வெற்றிசங்கமீட்டினேன் இனி நம்மிடாததத்தைத்திருப்பி பட்டணம் சேருவோமப்பாருஜனே.

பொதுவசனம்.

இப்படி அர்ச்சுனருஜன் ரதத்தை திருப்பிக்கொண்டுவர துரியோதனன் வருத்தத்தோடு பட்டணம்போகிற விதங்காண்க.

துரியோதனன் புலம்பல்தரு.

மண்டலத்திற்றாருஞ்ச சண்டைக்கிட்டுக்கேனே தெய்வமே
எல்லாம் [illegible] தெய்வமே
[illegible] பெரியோர்தன் சொல்லை [illegible] தெய்வமே
அறியாமல் போனேனே அபிஜயம் [illegible] தெய்வமே
சகுனி கர்ணன்சொல்லை சதமாகநம்பினேன் தெய்வமே
பங்கமடைந்திட விதிவரலாச்சுதே தெய்வமே
ஆனசேனை [illegible] திருப்பிவந்தேன் தெய்வமே
நாணுமனந்துணிந்து ராஜனைபிற்பெற்றேன் தெய்வமே

வசனம்.

இப்படி அழுதுக்கொண்டு துரியோதனமுதலானவர்கள் அஸ்தினாபுரம் சேர்ந்திருக்க தெட்சண திசைவிட்டு விராடராஜன்முதலானவரும் பட்டணம்சேருகிற விதங்காண்க.

விராடராஜன் சொல்கவி.

பட்சமுள்ளவரேகேற்று பட்டமேர பாதமேபோற்றி
கட்டிபமாய் துரியன்வந்து தானாவுயிர்க்கேயிங்க

துஷ்டர்கள்வந்தாலென்ன ஜூழவேபடைகளெல்லாம்
தெட்சணதிசைதனைவிட்டு திருநகரேகுவோமே.

வசனம்.

ஐயாகெங்குபட்டரே ஹரிகர்த்தன்போனஇரண்டுதினமாயிற்று
துரியனவாள் வரவில்லையே அப்படிவந்தாலும் வரட்டும் நாமெல்
லோரும் பட்டணம்சேருவோம் கெங்குபட்டரே.

கெங்குப்பட்டவர் வசனம்.

அப்படியே நல்லது விலாடராஜனே.

விலாடராஜன் சொல்தரு.

ஷ்தன் துரைதிரு வந்துபலாயனு
இன்பகெங்குபட்டரே
விந்தையசப்பட்டணம் தன்னையேநாடியே
வேடிக்கையாய் நடப்போம்
திவாகயானை சேனைகள் சூழவே
மிகுந்த்துரகமேரி அரசர் நெருங்கவே
பட்டணம் [illegible] அன்பாகவேகுவோமே
வெற்றி மு[illegible] விருதுக்கொடிபறக்க
வி[illegible]காவலர் காடவே
பற்றியதாகவே எல்லோருக்கூடியே
பட்டணம்சேர்ந்திடுவோம்
வாளுடன் கேடயம் வரிசிலைதண்டமும்
வாகுவலயமிலங்க
ஆளும்கொலுவுக்கு யாதாரமென்மீ[illegible]
அன்பாகவந்தோமே.

பொதுகவி.

வந்துமெமாகரடைந்து மச்சபூபனைவணங்கி
இந்துவின் குலத்துவேந்தே இடர்செய்தவிதமுரைத்தீர்
மைந்தனும் போய்சென்ற வகையெல்லாம் அதர்சொல்ல
விந்தையுடகலங்கிமன்னன் திகைத்துமே உரைக்கின்றனே.

வசனம்.

இவ்விதமாக விருடபூபதி பட்டணஞ்சேர்ந்தபோது தூதர்கள் வணங்கி சந்திரகுல சூரியன்வந்து வடதிசை பசுத்திரளை கவர்கொண்டதும் பேடியைசாரதியாக வைத்துக்கொண்டு உத்திர குமாரன் சண்டைக்குப் போயிருப்பதைச்சொல்ல விருடராஜன் வருத்தமடைகிற விதங்காணக.

விராடராஜன்சொல்தரு

கேட்டீரோகெங்குபட்டரே வடதிசையில்
வாட்டமுடைய துஷ்டனை
வாட்டவே மகன்போன வகையெல்லாம் தூதர்சொல்ல
காட்டவே பெண்ணாம் கலக்கித்தவிக்கலாச்சே (கேட்)
தென்திசைதன்னை நாடியே வருவாரென்று
இன்பங்கொண்டாமே கூடியே
வம்பன் சூரியோதிரன் வடதிசைதனில்வந்து
துன்பம்செய்யவே மைந்தன் துணிந்துசென்றதுவெல்லாம்
அளவில்லாசேனை கூட்டியே உலகமஞ்ச
வளமானதேர் பூட்டியே
தன்சேகரமுடனே தான்வந்திருக்கும்போது
உளமெத்தவாடுதே ஒருசிறுவனும்போக
வல்லமைகெடுவாரோ உத்திரன் தன்னை
கொல்லாமல் விடுவாரோ
சொல்லவுமெளிதாமோ சூரியன்சேனைகள் தன்னை
எல்லாம்சேனையுங்கூட எதிரேவரும்படைகூடி (கே)

கெங்குபட்டர் சொல்கலி.

வாடியே தவிக்கவேண்டாம் வலுவுள்ளமைந்தனுக்கு
பேடியுங்கூடிப்போக பிழையொன்றும்வந்திடாது
கூடியேமனங்களித்து குறிக்கொருகடையாட்டம்
ஆடியே பரிவோமன்றே அன்னைதரும் குமாரனே.

வசனம்.

கேளும் விராடராஜனே நீ மனம்வாடவேண்டாம் பேடியே உன்மைந்தனுக்கு செயந்தரவல்லவன் நீயாதொன்றுக்குமஞ்சாமல் மனங்களித்து பேடிகெலிப்பானென்றும் ஓராட்டம் பகடையாடுவோம் வாருமகாராஜனே.

விராடன்சொல் தரு.

என்மகன் கெலிப்பான் கெலிப்பானென்றால்
என்னாட்டம் பலிப்பாம்
நன்மையாய்ப்பந்தயம் காட்டமும்ஆட்டமும்
செம்மையாய் விழவேணும் சிதரன்மருமனே (என்)

தருமராஜன் சொல்தரு.

பேடியேகெலிப்பான் கெலிப்பானென்றால்
பிழையில்லை பலிப்பாம்
காடியேபந்தயம் நமக்காகவிழவேணும்
ஓடியகாய்களும் ஒழுங்கேரிவரவேணும் (பேடி)

விரான்சொல் தரு.

உத்திரன்கெலிப்பான் கெலிப்பானென்றால்
வெற்றியும்பலிப்பாம்.

அத்துமேவரவேனும் ஆட்டம்சோராமலே
இத்தமும்வாடுதே நிலைக்கத்திட யென் ஆட்டம் (உத்தி)

தருமராஜன் சொல் தரு.

சாரதிகெலிப்பான் கெலிப்பானென்றால்
தடையின்றி பலிப்பாம்
பாரதிகாரமாய்ப் [illegible]ய்ங்கிதந்தன்காரமெல்லாம்
தீராதிகாரனே ஜெயித்ததுநியன்றாட்டம் (சாரதி)

விராடன் சொல் கவி.

அண்டியே [illegible]ந்தநாளாய் [illegible]தரித்தின்புங்கொண்[illegible]
பண்டிதரென [illegible]மைந்தன் பகைமில்லாமல் பே[illegible]
வென்றிடுவானெ[illegible]ன்றோத வெகுண்டுபேகாளையவ[illegible]
சண்டனைப்போ[illegible]லநின்று தரைதனிலடித்திட்டானே.

வசனம்.

இந்தவேதபண்டி[illegible]ராஜ[illegible] [illegible] நம்மை அண்டின நாள்முதலாக அன்னவ[illegible]க்கிர [illegible]க்கலான [illegible]தந்து ஆகரித்தும் [illegible]பம் பெருகிய நம்முடைமை[illegible]னையிக[illegible] [illegible] பெரிதாயெண்ணி அவனை கெலிப்பானென்[illegible]று வாதித்து தன்றாட்டத்தை கெலித்த போது எமக்கானாலும் க[illegible]ரமானகோபம்பிரந்துகாயைவாரிதரையி[illegible]டித்தேன் பாருங்கள்.

பொது கவி.

வீசியதரையி[illegible] விசைகொண்டு காய்கிளம்பி
நேசித்தகெங்குப்பட்[illegible]ர் நெத்தியி[illegible]படடபோது
கூசிதக்குருதிசோர கோதைக[illegible]டணியாலேந்தி
மாசிதம்கண்டுவந்த வ[illegible] உரைக்கின்றமே.

வசனம்.

விராடராஜன்வீசியபாச்சிகையானது பூமியி[illegible]பட்டு விசைகொண்டுகிளம்பிகெங்குட்பட்டர் நெத்தியில்பட்டு உதிரம்பெருகக் கண்டபணிப்பெண்ணா யிருக்கப்பட்ட துரோபதா[illegible]தவி தன்முந்தாணியால்ஒத்திவிட யாவரும் மனவாடியிருக்கிற தருணத்தில் அர்சுனராஜன் ரதம்திருப்பிபட்டணம்சேர்ந்துகெங்கு[illegible]பட்டர் நெத்திகாயத்தைப்பார்த்து கடிந்து சொல்லுகிற விதங்கா[illegible]க.

அர்ச்சுனன்சொல் கந்தார்த்தம்.

சூரியவன் [illegible]ஜெயித்து துருசாகவருகும்போது
தெரியான அண்ணனுந்தன் நெத்தியிற்காயங்கண்டு
வருசிலைக்கணையெடுத்து வளைத்தந்தபாணத்தாலே
சிரசைகண்டிக்கவேணுடி

அர்ச்சுனன் சொல் தரு.

செப்புமண்ணனைவந்தகாயத்தை [illegible] செய்தவன்பேரை
ஒப்பியந்தனுயத்தை
யிப்பவேயெடுத்துச்சொல்ல தப்பாமல் அ[illegible]னைவெல்லப்
சொற்படி அவனைக்கொல்ல (செ
யிருவிழி சிவக்குதே பெருகியே[illegible]காபம்வருகுதே
மெ[illegible]க்குமே உருகுதே நெஞ்சம் (செப்பு

கங்குபட்டர்சொல் கந்தார்த்தம்.

பதருமே[illegible]விஜயா[illegible]பயத்தினென்வி[illegible]பாணத்தை
சிதருமல்நம்மை[illegible]யல்லாம[illegible]ருட[illegible]ரித்த
யிதவான மச்ச[illegible]தன்யி[illegible]த்து[illegible] பகைக்காயை
சதமாகவா[illegible]யி[illegible]பா

தருமர்சொல் தரு.

அடிக்கக்கருந்தாகவே அவன்மனது
அடிக்ககாயமுண்டாகவே
மடிக்கயெண்ணமும்கொள்ள வரு[illegible]ம [illegible]தைதவும்பாவம் (அ
விடுவதுமேனும் படு[illegible]கர்மையும்
விடுவதுசெப்பவும் கொடுமையும்மல்ல அ

விராடரா[illegible]சொல்விருத்தம்.

நெரிதவறுதரும பூப[illegible]டியேபோற்றி நீங்களிக்க உருபாகி
அடு[illegible]தெல்லாம்
தெரிய[illegible]மலேதேனு பிழைசெய்தேனே செப்பெரிய குற்ற
மெல்லாம் பொறுப்பீரையா
சூரியவனைஜெயமடைந்து யெனைரக்ஷித்து சொல்லு
வெ[illegible]ணு பேறுதவிசெய்தீரையா
உரிய[illegible]னைவிஜயருக்கு யென்மகளைத்தந்து
உப[illegible]ரவிநகராளித்தேதன் கைக்கொள்வீரே

வசனம்.

சரணம் சரணமையா தர்மபுத்திர மகாராஜனே நீங்களொரு மாசி, ஒருவருஷகாலமாய் யென்னை அடுத்தீர்களே அடியேன் யே தேதும்பிழைசெய்தேனோ அதுகளையெல்லாம்பொருத்தாளவேண்டி யது துரியோதனனைச்செயித்து பெருதவிசெய்து யென்னை ரக்ஷித்த பெருதவிக்கு நானென்னசெய்யப்போகுரேன் யிந்தமகாவீராதிவீர னாகிய அந்தஅர்ச்சுனனுக்கு யெனதுமகளானஉத்திரியைத்தந்தேன் சீதனவரிசையாக உபலாவிய பட்டணத்தையளித்தேன் கைக்கொள் ளுவீர் மகாராஜனே.

தருமர்சொல் கவி.

பஞ்சவருந்தேவியுருவெடுத்தே நாங்கள்
பர்விசொன்ன நாள்கழித்து மனங்குளிர்ந்தோம்
அஞ்சலென்று ஆதரித்தமன்னவாழி
அபிமனுக்கு உன்மகளைத்தருவாய்நீயும்
வஞ்சகன் தன் மனமரிய வேணுமிப்போ
மகிழ்ச்சியுடன்யெல்லோரும் பயணமாகி
சஞ்சலங்களில்லாமல் வரிசையாக
தந்தநகர்தனை நாடியேகுவோமே.

வசனம்.

நாங்களைவருபேரும் முன் உருவெடுத்தோம் துரியன்கட்டளை யிட்டநாளைத்துலைந்தோம்நீமகிழ்ந்தளித்தஉன்மகளை அபிமன்னனு க்கென்றே கைக்கொண்டோம் யினி துரியவன்மனதரியும்படி நீயும் சீதனவரிசையாகத்தந்த உபலாவியத்துக்கு போகலாம்வாரும் மகா ராஜனே.

பொதுக்குரு.

பஞ்சவரைவருமேநல்ல பஞ்சாலநாயகியும்
கொஞ்சும் உபலாவியம்நாடி கூடத்துடந்தார்
எத்திசையுமதிக்கசோதி யிந்தருலம்விளங்க
சத்திபதிபார்களுமிக சந்தோஷமாய்நடந்தார்
மச்சபதிகளும் வெகு மன்னர்நெருங்கிடவே

பச்சைவண்ணன்பாதம்துதி பாங்காய்நடந்தனரே
தழைக்குள்புகழும்சாலே கிருஷ்ணசாமிதன்கவிபூமியெக்கும்
நிரைக்கும்படிநடந்துவெகுநேசமாய்வந்தனரே.

வசனம்.

இப்படி பாண்டவாள் உபலாவியம்வந்திருப்பதையறிந்து கிருஷ்ணமூர்த்தியானவர் வருகிறவிதங்காண்க.

பொதுகவி.

சங்காழிவாளும் தண்டும் சாரங்கத்தனுவும்மேந்தி
பொங்காழிசூழுமிந்த புன்பிடசகனும் ஐவர்
பங்கயக்கார்க்குந்திரான் மனைவிகள்மகிழ்ந்துசூழ
சிங்காரமாக கிருஷ்ணதேவரும் வருகின்றாரே.

கிருஷ்ணமூர்த்தி வருகிற சொல் தரு.

வந்தாரே ராயகிஷ்ணதேவர்உபலாவியம்நாடிவாராரே கிஷ்ணர் (தரு)
வந்தார்விருதமாக வானவர்மலர் தூவ
மருமலர் வள்ளயமும் பரிமளம்பெரிகிட
அரிவைபரணிபணி பெருமொளிவீச (வந்)
பஞ்சாயுதங்கள் மின்னவே அஞ்சாதவீரரென்னவே

மிஞ்சாமலடிக்கடி வேந்தர்வந்துவணங்க (சரு)
மிக்கவேபூஷணை வர்க்கமுமுன்னிட
வக்கணைவாத்தியம் திக்குகளஞ்ச (வந்தா)
வேதவாத்தியமுழங்க ந[illegible]லமெய்யிலணிந்தபீதாம்பரமிலங்க
பாதாம்புயம்சிரப்பும் பணிகின்பனௌபனென்ன (சரு)
பந்தர்கள் சித்தர்கள் உத்தமரானைவரும்
பத்திகள்செய்யவே சித்திமகிழ்ந்து (வந்தார்
மூலமந்திரவேதநாதன் கோவியநல்லூர்
சாலிக்கிஷ்ணன் பண[illegible]ம்பாதன்
கோலமணிகளாட கோதயர்[illegible]டைசூழ (சரு)
கொஞ்சியேயிருபுரம் வஞ்சியர்[illegible]களரிகள்
அஞ்சலர்வீசவே [illegible] (வந்தார்)

தர்ம்மராஜர் சொல்கவி.

கொண்டல்மேனியனேபோற்றி கோபிகா ரமணாபோற்றி
தண்டம்வாள்சங்குசக்ரம் தனு[illegible]ங்கரனேபோற்றி
கண்டுமே உமதுபாதம் கடைத்தேரி[illegible]ப்படைந்தோம்
அண்டியே யடியர்தம்மை ஆதரி[illegible]ருளுவீரே.

வசனம்.

சரணம் சரணம் கோபால[illegible]ரமணா கோபிகாரமணா பஞ்சாயுதபாணியே தேவரீர்பாததெரிசனம்செய்து நாங்கள் கடைத்தேரினோம் யினி யெங்களுக்கு புத்தியீனமேதென்று மகிழ்ந்தருளும் கர்த்தனே.

[illegible]மூர்த்தி சொல்கவி.

அதிவித்தர்ம்மபூபா அனைவரும்சுகமேவாழி
விதியினிநீங்கவிந்தமேதினியெல்லாம்போக
மதியுள்ளமச்சவேந்தன் மகளுக்கும் அபிமனுக்கும்
துதிபெறமணம்நடத்தி சூரியனைக்காணலாமே.

வசனம்.

கேளும் தர்ம்மபுத்திரமகாராசனே உங்களுடைய கஷ்டகாலமெல்லாம்கழித்துவிட்டீர்கள்யிந்தபூமண்டலமெல்லாம்நீங்களே

ஆளப்போகுரீர்கள் யிப்பவும் உத்தரிக்கும் அபிமன்ன னுக்குந் திருமணம் நடத்திய பின்பு துரியன்முனைதரிய வேண்டியது மகா ராஜனே.

தர்மராஜர் வசனம்.

அப்படியே மகாபாக்கிய மையா சுவாமி அப்படியிருக்க நல்ல முகூர்த்தநாள்நேமித்துமணவரைப்பந்தலையலங்காரம்செய்து கலியாணத்துக்கு ருஜாதிராஜர்களெல்லாம் வருவிக்கிறவிதங் காண்க.

பொது கவி.

வாசவன்மனம்களிக்க மணிபணியலங்கரித்து
நேசமாய் தர்பர்சூழநெருக்கிடமன்னரெல்லாம்
பாசமாய் மறையோர்சூழபாவைஉத்தரியாள் முன்னே
ஆசையாய் மணவரைக்கு அபிமன்னன்வருகின்ருனே.

அபிமன்னன் சொல்தரு.

அபிமன்னன் ருஜன்வந்தான் மணவரைக்கு
அபிமன்னராஜன்வந்தான்
அபிமன்னராஜன் வந்தான் அழகாய்நடைநடந்து
தவமணியானஉத்ரி சம்ரமுடனேகூடி (அபிமன்ன)
பட்டுத்தூராகுச்சு பதக்கம்பளபளென்ன
கட்டுவடமசைய மெட்டும்பளபளென்ன (அபிமன்ன)
மன்மதன்ரதியெனவே மனதில்சந்தோஷமாகி
நன்மையதாகவே ராஜராஜர்மதிக்க (அபிமன்)
சரிகைவேஷ்டிகள்மின்ன சர்வபூஷணம்துன்ன
சரிகைகட்டாரிவாங்கு துலங்கும்பணிகள்மின்ன (அபிமன்)

வசனம்.

இப்படியாக பெண்ணும் பிள்ளையையும் மணவரையில் திருத்திருமண முடிக்கிற விதங்காண்க,

பொது தரு.

மணமதுசெய்தாரே யிருவர்க்கும்
மணமதுசெய்தாரே

மணமது செய்ய — வல்லிசிரோன் மணிக்கி
யிணையில்லா உத்திரிக்கி — யின்பம் பெருகிடவே (மணமது)

செய்யும் சடங்கு — சிறப்பாய் முடித்திடவே
சேயிழைமாரெல்லாம் — வந்து அடுத்திடவே
வையகம் அந்தணர் — வேதம் படித்திடவே
மட்டில்லா வாத்தியம் — பேரியடித்திடவே (மணமது)
வரிசை வரிசையாய் — தீபமெடுத்திட
மட்டில்லா தபலை — தாம்பலங்கள் தந்திட
சாமா ஆலாத்தி — கும்பமெடுத்திட
தாய் தந்தை அனைவர்க்கும் — யின்பங் கொடுத்திட (மணமது)
சாலுமரசாணி — கால்கள் நாட்டவே
தம்பூரு வீணையும் — பேரிகையீட்டவே
மாலையும் கங்கணமும் — தாலியுங் [illegible]வே
மறையோர்கள் ஓதி — தன்னையுங் காட்டவே (மணமது)

பொது கவி.

மட்டிலா சடங்கு செய்து மணமது முடித்த பின்பு
வெட்டிவேர் கல்பம் பூசி வெகுமதி மன்னனுக்கு
அட்டியில்லாமலீய்ந்து அவரவர் நேசம் போக
இஷ்டிகள் கழித்து இருந்தனர் [illegible] தொழுகலானார்.

பா[illegible]வ[illegible] விதரு.

ஆதிமூலாதரமே [illegible]திப்புனே
சோதிசொரூபனே பெங்களோபா தரி துலங்குமணிமார்பா
மச்சகூர்மவதாரா வரா[illegible]ரசிங்கனே
பக்ஷிவாகனே ஜெகரா[illegible]காதலனே
யிஷ்டம் வைத்தா[illegible]டருள்வாய் நாள் தன்னை கொண்டிடவே
நல்லகெருடன் மீதேறி [illegible]ன் தண்டுசங்குடனே
சக்கரமேந்திய மாதவா ஆதரிப்பாய்
சித்தசாராஜனையும் அன்பாய் பெற்ற கருணாகரா
உத்தமர் பேழை சொல் குற்றம் பொறுத்துமே
புகழ்துமே யாதரிப்பாய் (ஆதி)

கிஷ்ணபகவான் சொல்கவி.

நேசமுடனடிபணிந்த நீங்கள்வாழி
நிலமைபெருமன்னவர்கள் செங்கோல்வாழி
தேசமெங்குஞ் செழிப்புடனே ஆண்டுநீங்கள்
செல்வமுடன் யெல்லோ[illegible]ரும் தழைத்துவாழ்க
வாசமுடன் யின்னகரில் [illegible]ருந்தால் பின்பு
வந்து துரியவன்மனதை [illegible]றிவோமிப்போ
பாசமுடன் துவாரகைக்கு [illegible]சென்றுவாரோம்
பட்சமுடன் மங்களமாயிருந்திடீரே.

வசனம்.

மகா தயிரியத்துடனே நமது திருவடியைப்பணிந்த யாவரும் நீதிமன்னர் செங்கோலும் தேசமன்பத்தாரும் மாதமும்மாரிபெய்து மென்மே[illegible]பாக்கியம்பெற்றுவாழ்க்கடவதாகாம் இவ்வேளை துவாரகாபுரிசேர்ந்துவந்து துரியவன்மனதை அறிவோம் நான் துவாரகாபுரிக்குபோய் வருகிறேம் தர்ம்மபூபதியே அப்படியே மகாபா கியமையாசவாமி.

வாழிவிருத்தம்.

சீரில[illegible]ண்டமெங்கும் வாழி
[illegible]வெல்லாம் சிறந்து வாழி
சீரிலகும் அஸ்[illegible]ரியும் வாழி
பெட்பிலகும் கிரு[illegible]ணமூர்த்திவாழி வாழி
பாரிலகுமாந்தர்களிற் சிறந்தபூபர்
பஞ்சபாண்டவர்கதையை படிப்போர்வாழி
சீரிலகும் கவிராஜர் வா[illegible] வாழி
நேமியுள சிவசு[illegible]ரம் வாழி.

விலாடபர்வ நாடகமென்னும் மாடுபிடி சண்டை.

சம்பூர்ணம்.

குலமகள் [illegible]னம் பிரஸ்.

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில் சென்னைசூளை கறையாங்குட்டை வீதி 54-வது நெம்பர் வீட்டில் அடியில்கண்ட புஸ்தகங்களும், இன்னும் அனேகவிதமான தமிழ்-தெலுங்கு, புஸ்தகங்களும்! சகல வியாதிகளுக்கு அவுஷதங்களும் பெற்றுக்கொள்ளலாம். அரையணா [illegible] அனுப்பினால் பெரிய கேட்லாக் ஒன்று இனாமாய் அனுப்பப்படும்.

கார்க்கேயபுராணம்	0	12	0
சந்தர்நாடி	0	8	0
புஜண்டர்நாடி	0	5	0
சோதிட அரிச்சுவடி முதற்பாகம்	0	3	0
டிஷ இரண்டாம்பாகம்	0	3	0
வைத்திய அரிச்சுவடி முதற்பாகம்	0	3	0
டிஷ இரண்டாம்பாகம்	0	3	0
வி[illegible]சரி	0	2	0
நளாயினிநாடகம்	0	5	0
குறவஞ்சிநாடகம்	0	5	0
ஆடுபிடிசண்டை	0	8	0
அ[illegible]பலி	0	5	0
வாலிமோட்சநாடகம்	0	5	0
லக்ஷ்மணதேவிநாடகம்	0	5	0
கிருஷ்ணன் தூதுவிலாசம்	0	5	0
விநாயகர்கல்யாணம்	0	5	0
பரமசிவன் பார்வதிக்கு உபதேசித்த (ரோகை சாஸ்திரமென்னும் சுவ்வராகாடு) 120,0[illegible] பாடல் முதல்காண்டம் 1000 பாடல் அச்சிட் டிவ[illegible]ந்தது காண்டம் 1-க்கு விலை ரூபா	1	0	0
[illegible] அரிச்சந்திரவிலாசம் உயர்ந்தபதிப்பு சித்திரங்களும் 100-படங்களுடன்	2	0	0
ஆஞ்சநேயர்கீர்த்தனை	[illegible]	2	0
மநுகத்தியானம்	0	4	0

நமது விலாசம்:—

[illegible] முதலியார் அன் கோ,

கறைபாங்குட்டைவீதி, நெ. 54

சூளை போஸ்டு, மதராஸ்.